614 / 1-62

St. DAVID'S HIGH SCHOOL

MAGAZINE

226

CUDDALORE O. T.

T2,4,21193e
1N67
N62
1795f.7

nuary 1962

(Pausa 1883)

ACL-TNAL
00215

பொருளடக்கம்

உ

தமிழ்ப் பெரியார் திரு. வி. க.
பாட்டும், பயனும்
கைத்தறியின் சிறப்பு (பாட்டு)
நித்தியம்
வள்ளுவரும், வாயுறை வாழ்த்தும்
கண்ணாடித்துண்டு
நமது தாய் மொழி
யுவராஜ்! நீ துரோகி!
தமிழ் நாட்டின் தவப்புதல்வர்
தாவர வளர்ச்சியைப் பாதிக்கும் காரணங்கள்
கொடைக்கானல்
புகழுடையோர் யார்? கற்றோரா? கல்லாதோரா?
பாரதியின் சாதனை (பாட்டு)
விருந்தோம்பல்
இவ்வுலகத்தியற்கை
வாய்மையின் மேன்மை (பாட்டு)
ஹிந்தி ஏன்?
Late Mr. Sam P. Jesuadian
School Report

தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

மா. கணேசன், S. S. L. C.,
தூய தாவீது உயர்நிலைப்பள்ளி, கடலூர் O. T.

*

தமிழ் என்பதற்கு இனிமை என்பது பொருள். தமிழ் என்று சொன்னால் ஒவ்வொருவர் வாயிலிருந்து உமிழ்நீர் சுரக்கின்றது. காரணம் அவ்வளவு இனிமை வாய்ந்தது நம் தமிழ். அவ்வளவு இனிமை வாய்ந்த தமிழுக்குப் புதுமை தேடியவர் செந்தமிழ்நாட்டின் தவப்புதல்வர் "திரு. வி. கலியாணசுந்தரனார்" ஆவார். அவர் வாழ்வு, தமிழர் வாழ்வு ஆகும். அவர் தமிழகத்துக்கு ஆற்றியத் தொண்டுகள் அளப்பரியன அவர்தம் வரலாறு அமிழ்தினும் இனிது.

"அரிது அரிது மானிடராதல் அரிது
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ"

என்று பெருமக்கள் மானிடப் பிறவியைப் போற்றுகின்றனர். இப்படி மானிடராய் வாழ்வோர் அனைவரையும் மாநிலம் போற்றுவதில்லை. ஒரு சிலரே இறந்தும் இறவாப் புகழுடன் வாழும் சுடராய் வாழ்வோர் ஆவர். அவ்வாறு வாழ்கின்றவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் மிகச்சிலரே உள்ளனர். அவ்வாறு வாழும் சுடராய் வாழ்பவர்களில் தமது இறுதி மூச்சுவரையில் தமிழுக்காகவும், தமிழகத்துக்காகவும் அரும்பாடு பட்டவரும் தமிழகத் தந்தை எனப் போற்றுதற்குரியவரும் ஆன நம் அண்ணல் "திரு வி. க." வே தலைசிறந்தவராவர்.

பிறப்பு :

இவ்வாண்டகை செங்கற்பட்டைச் சேர்ந்த துள்ளமென்ற இடத்தில் விருத்தாசல முதலியாருக்கும், சின்னம்மை என்பவருக்கும் அருமை மகனாக சுபானு ஆண்டு ஆவணித்திங்கள்

கக (26—8—1883) ஆம் நாள் மிருகசீரிடத்தில் கலியாண-சுந்தரனாராகப் பிறந்தார். அவர்தம் குழந்தைப் பருவம் துவங்கி முதுமையுற்று கனிந்தது வரை அழகிய இனித்த தமிழில் இவ் வரலாறு மலர்கின்றது.

குழந்தைப்பருவம் :

"விளையும் பயிர் முளையிலே" என்பதுபோல் குழந்தைப் பருவத்திலிருந்தே வாழ்க்கையிலும் சிறந்திருத்தல் உயர் பண்பாகும். ஆனால் இந்நிலை எல்லோருக்கும் எய்துவதில்லை. கலியாணசுந்தரனார் தம் வாழ்க்கைக் குறிப்பிலே, குழந்தைக்கும் முதுமைக்கும் இடைப்பட்டது சோதனைக்குரியதாக உள்ளது. மாசினைக் கடப்பது, மாசினுள் நுழைவது இந்நிலை எய்தினவரே பெரியோர் எனப்படுவர். அந்நிலையினரான "சுந்தரனார்" கிராமத்தில் படித்தார் விருத்தாசல முதலியார் இராயப்-பேட்டையை நாடினர் இங்கு வந்தவுடன் அரிசிமண்டி வைத்துக்கொண்டு அரிசி, கொள்ளு, உளுந்து, பருப்பு முதலிய வற்றை விற்றுத் தன் மகனைப் படிக்கவைத்தார் பிறகு அண்ணல் திரு. வி. க ஆயர்பாடி என்ற பகுதிக்குச் சென்று படித்து வந்தார். கலியாணசுந்தரனார் ஒவ்வோர் வகுப்பிலும் முதற்பரிசு பெறுவார். இவர் பயிலும்போது கோட்டிப்புள், சடுகுடு முதலிய ஆட்டங்களில் மிகுதியான விருப்பமுடையவர் அண்ணல் திரு. வி. க. மூன்றும் வகுப்பில் பயிலும் போது வாழை மரத்தைப்பற்றி எழுதிய கட்டுரைக்குப் பரிசு கிடைத்தது. திறமை பாராட்டப்பெற்றது இவர் பள்ளிப் படிப்பை முடித்து 1894-ல் வெஸ்லி கல்லூரிக்குப் போய்ச் சேர்ந்தார், மாங்காய் அடித்தல், குரங்காட்டம் முதலிய பிள்ளைமைத் தன்மையிலும் இவர் ஈடுபட்டிருந்தார். இவர் இளமையில் குடும்பப் பணியிலும், நாட்டுப்பணியிலும் ஈடு பட்டார்.

சங்கத் தலைவர் :

திரு வி க இளமை முதல் தமிழைப் பேரார்வத்துடன் பேணிக் கற்றார். ஆசிரியராகவும், தொழிலாளர் தலைவராகவும், பெண்ணினத்திற்கு வழிகாட்டியாகவும், சீர்திருத்தக்காரராகவும்

வாழ்ந்தார் நம் நாடும், மொழியும், அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டு உழன்றபோது அருந்தலைவர்களும் தமிழ் பேச வராது என பெருமிதத்தோடு கூறிய அக்காலத்தும் தேனினும் இனிய தென்றல் போன்ற தனித்தமிழில் மாண்புறப் பேசவும், இனிமையுற எழுதவும் முடியும் என்பதை எழுதியும், பேசியும் வந்தார் அண்ணல் திரு. வி. க இவர் அரசாங்கத்தை எதிர்த்துப் பல சங்கங்கள் நிறுவினார் இவர் அக்காலத்தில் தைப்போர் சங்கம், நூற்போர் சங்கம், ஆலைத் தொழிலாளர் சங்கம், விற்போர் சங்கம், வாங்குவோர் சங்கம், உண்போர் சங்கமெனக் கணக்கிடமுடியாச் சங்கங்கள் எல்லாவற்றிலும் தலைமையும், உண்மைப் பொருளுடையதுமான தொழிலாளர் சங்கத்தை அக்காலத்தில் தோற்றுவித்தார் நம் அண்ணல் திரு. வி. க. பேச்சு முதலிய பலதிறத் தொண்டுகளாலும் நெடுங்காலம் தொடர்ந்து தமிழ் நாட்டை வளர்த்த பெருமைக்கு உரியவர் திரு. வி க.

பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகை :

திரு. வி. க. ஓயாது இராப்பகலாக உழைத்தார். எழுதினார். மூலை முடுக்கெல்லாம் சென்று பேசினார். மாநாடுகளில் தலைமை தாங்கினார். வருவார், போவார் அனைவரையும் போற்றி உரையாடினார். ஒருமுறை பழகியவரையும் பல ஆண்டுகள் மறவாமல் போற்றினார். ஊரும் பேரும் மட்டும் அல்லாமல் ஒவ்வோர் ஆளுக்காகவும் தம் அரிய காலத்தைச் செலவிட்டார். தாம் உயர்பதவி பெறுவதற்காகப் பிறரை ஏணியாகப் பயன்படுத்திக்கொள்ளாமல் பிறர் உயர்வதற்காக உற்றுழி எல்லாம் தாம் உதவினார் பிறர் இன்பத்திற்காகத் தாம் துன்புற்றார். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் ஓயாது உழைத்தார்.

இல்லறமும், நல்லன்பும் :

திரு. வி க. இல்லறத்தின் சிறப்பை உணர்ந்தவர். துறவறத்தில் தூய்மையைப் பெற்றவர் இவர் எவர்க்கும் அஞ்சாத சீர்திருத்தக்காரர் எதற்கும் தயங்காத முற்போக்காளர் ஆனால் அறத்திற்கு அஞ்சுபவர். அன்பிற்குத் தயங்குபவர். அறம்வெல்ல முயலும்போது அதற்குத் தலைவணங்குவார். அன்பு தடுக்க முயலும்போது அதற்கு விட்டுக்கொடுப்பார்

பண்பும், பணிவும் :

திரு. வி. க. என்றால் எவரும் மறக்கமுடியாத மூன்றுத் தனிப்பண்புகள் அவரிடம் உண்டு. அவை தூய்மை, எளிமை, பொதுமை.

தூய்மை :

புறத்திலும், அகத்திலும், எழுதும் எழுத்திலும் எண்ணும் எண்ணத்திலும் உடுக்கும் உடையிலும், உரைக்கும் உரையிலும் செய்யும் கடமையிலும் செல்லும் நெறியிலும் தூய்மை துலங்கும்.

எளிமை :

காண்பதற்கும், கேட்பதற்கும் போவதற்கும், அழைப் பதற்கும், உழைப்பதற்கும், உபசரிப்பதற்கும், உதவி புரிவதற் கும், குறை கூறுவதற்கும், குறை நீக்குவதற்கும் அவரிடம் எளிமை இலங்கும்.

பொதுமை :

காந்தியடிகள்போல் பல கட்சியினர் உள்ளத்தைக் கவரும் அரசியல் பொதுமை, காரல்மார்க்ஸ் போல் பல மக்களையும் ஒன்றுபடுத்த விழையும் பொருளியல் பொதுமை, இராமலிங்க அடிகள்போல் பல சமய நெறிகளிலும், அடிப்படையில் ஒன்றெனக் காணும் சன்மார்க்கப் பொதுமை, திருவள்ளுவர் போல் எக்காலத்திற்கும் இன்றியமையாத உண்மைகளை உணர்ந்து தெளியும் வாழ்வியல் பொதுமை, இவைபோன்ற தனிப் பண்புகள் அவரிடம் பொலியும்.

தமிழ்நூல் பற்று :

இவர் சிலகாலம் பத்திரிகை ஆசிரியராய் இருந்து அரசியலைப்பற்றி அறிவுறுத்தினார் குடும்பத்தின் குத்துவிளக்கு — அணையாத ஒளி — பெண் என்பதை நன்கு உணர்ந்தவர்

இவர். பெண்ணின் பெருமையை ஆண்கள் உணருமாறு செய்தார் ஆண்களுக்கு பெண் அடிமையல்லள் என்பதை அறியும் பொருட்டு பெண்ணின் பெருமையைத் தீட்டினார்.

அண்ணல் திரு. வி. க மக்களிடையே பொதுமையும், புதுமையும், ஒற்றுமையும் நிலவ வேண்டுமென அரும்பாடு பட்டார். இவர் தமிழ் நூல்களிடமும், தமிழர்களிடமும் கொண்ட அன்பிற்கு அளவே கிடையாது. சான்றாக இவரைப் பார்க்கவந்தபோது ஒரு நண்பர் தமிழ்நாட்டின் பண்பிற்கேற்ப பழங்கள் போன்ற பொருள்களை வாங்கிவந்தார். அப்பொருளைப் பார்த்த திரு. வி. க. ஏன் இவைகளெல்லாம் என்று வெறுப்போடு கூறினார். கடைத்தெருவில் தமிழ்ப் புத்தகங்கள் ஏதேனும் ஓரிரண்டு அணுக்களுக்கு விற்கவில்லையா ? அந்தப் புத்தகத்தில் ஒன்று வாங்கிவரக்கூடாதா எனக் கேட்டார் காரணம் என்ன? பழம் பிடிக்காத காரணமா ? அன்று. நண்பர் மீதுள்ள வெறுப்பா ? ஒன்றுமில்லை. தமிழ் நூல்களிடமிருந்த பற்றுதான் காரணம்.

நாட்டிடை ஒற்றுமை :

திரு. வி. க. அரசியல்வாதியாக இருந்து மக்களிடையே ஒற்றுமை நிலவ அரும்பாடுபட்டார். தமிழை வளர்ப்பதற்கு இரவுபகலாக ஓயாது உழைத்தார். தமக்கென வாழாது பிறர்க்காகவே உயிர் வாழ்ந்தார்.

உலகம் உணர்வு நிலைபெறப் பயில்க ;
உலகம் உறுப்பு பலபல உடையது ;
உறுப்பு போர்செயின் பொறுப்புலகு ஏது ?
கண்ணும், காதும், மூக்கும், நாக்கும்,
கழுத்தும், தோளும், கையும், காலும்
குழப்பம் விளைத்தால் செழிப்புடல் ஏது ?
நாடு மொழிப்போர் கேடே பெருக்கும்
உறுப்புப் போர்கள் ஒழிக, ஒழிக,
உலகில் ஒருமை நிலைபெற உழைக்க,

என்று உலகம் முழுவதும் ஒற்றுமையாக வாழவேண்டுமென விரும்புகின்றார். அண்ணல் திரு. வி. க. தமிழ்நாடு உலகப்

பரப்பில் கீரைப்பாத்தி அளவு இருந்தபோதிலும் தமிழர்கள் கூறும் அறம் உலகம் முழுவதும் பொருந்துமாறு உலகை நோக்கி கூறுவது தமிழர்கள் இயல்பு. எனவே திரு வி. கவும் பரந்த மனத்தோடு கூறுகின்றார். உடலின் பகுதிகளாகிய கையும், காலும், கழுத்தும், கண்ணும், காதும் குழப்பம் விளைத்தால் செழுமை வாயந்த உடல் இருக்காது. அதைப் போல உலகத்தின் உறுப்புகளாகிய ஒவ்வொரு நாடும் இணைந்து வாழவேண்டுமென விரும்புகின்றார் நிறப்போரும் மொழியின் அடிப்படையில் தோன்றும் போரும் கேட்டையே விளைவிக்கும் ஆதலால் போரின்றி அமைதியாக உலக மக்கள் வாழவேண்டு மென விரும்புகின்றார்

தனித்தமிழ் தொண்டு :

திரு. வி. க. இலக்கியத் தமிழை வாழ்விற்குரிய தமிழாக ஆக்கினார். தமிழ் மொழியிலே செய்தித்தாளும், வார இதழும் நடத்திக்காட்டினார். இல்லறம் போற்றத்தக்கது என்பதை துறவிகளும் உடன்படுமாறு நிறுவினார். வருங்காலத்திற்கு ஏற்ற வகையில் இளைஞர்களின் உள்ளங்களை வளர்த்து பண்படுத்தினார். சென்ற காலத்தின் மாசுகளை முதியோரும் உணர்ந்திடுமாறு அவைகளை அகற்றித் தூய்மைப் படுத்தினார்

திரு வி க. தம் வாழ்க்கையில் கண்ட தோல்விகள் சில. வெற்றிகள் பல. இவர் தமிழை வளர்ப்பதற்கு மிகவும் அரும்பாடுபட்டார். உரைநடை நூல்களை இயற்றி இந்நூலின் வாயிலாகத் தமிழை வளரச்செய்தார்.

திரு. வி க. ஒரு காலத்தில் "இளமை விருந்து" என்னும் நூலை எழுதினார். பெண்ணின் பெருமை தீட்டினார். "காந்தி-யடிகளும், மனித வாழ்க்கையும்" என்ற நூலைப் படிக்கும் தோறும் ஆங்காங்கு கிடைத்த உயரிய கருத்துக்களாகிய தேனைத் திரட்டி ஒழுங்கு செய்தார் எனத் தெரிகிறது தேச பக்தன் ஆசிரியராகப் பணியாற்றியபோது 1921-ல் 51 பக்கங் களும், 1926-ல் ஐந்நூறு பக்கங்களாக அது மலர்ந்தது.

1922-ல் நாயன்மார் திறம் என்னும் நூலை இயற்றினர். இந்நூலில் நாயன்மார் கொண்ட உண்மை உறுதி, அஞ்சாமை ஒழுக்கம், வீரம் முதலியனவும் மக்கட்கு இன்றியமையாத வேறுபல செம்பொருள்களும் விளக்கப்பட்டுள்ளன. முருகன் அல்லது அழகு என்னும் நூலை இயற்றினர். இந்நூல் 1925-ல் முருகன் என்னும் பெயருடன் வெளிவந்தது. பிறகு 1927-ல் முருகன் (அ) அழகு என்னும் பெயருடன் அமைந்தது. சைவத்தின் சமரசம் என்னும் நூலை 1924-ம் ஆண்டு வெளியிட்டார்.

"தமிழ்த் தென்றல்" என்னும் நூல் 1928-ல் வெளியிட நேர்ந்தது. நம் நாட்டின் படைவளம், கல்வி, அறம், அரசு, வழக்க ஒழுக்கம் முதலியவற்றினை மக்கட்கு நினைவூட்டி இன்றியமையாத உரிமை வேட்கையை அவர்களிடையே எழுப்ப வேண்டுமென்பதும், அதற்கு அடிப்படை தாய்மொழி என்பதும், அது தமிழர் உள்ளத்திலே நிலைபெறல் வேண்டுமென்பதும் ஆகியவை சுந்தரனர் வேட்கையாகும். இது பொதிய மலையிலேயே இருந்தபோது தோன்றிய தமிழ்த் தென்றல் ஆகும்.

தமிழ் நூல்களிற் பௌத்தம்; இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்; சைவத்திறவு; தமிழ்நாடும் நம்மாழ்வாரும்; இமயமலை அல்லது தியானம்; சித்தமார்க்கம்; இந்தியாவும், விடுதலையும்; சீர்திருத்தம் (அ) இளமை விருந்து 1937-லும், பெண்ணின் பெருமை (அ) வாழ்க்கைத் துணைநலம் 1927-லும், பரம்பொருள் (அ) வாழ்க்கை வழி 1949-லும், ஆலமும் அமுதமும் 1943-லும், சைவசமய சாரம் என்பது 1944-லும் இயற்றி இதன் வாயிலாகத் தமிழை வளரச்செய்தார்.

முருகன் அருள்வேட்டல் முதல் கிறிஸ்து அருள்வேட்டல் வரை பல அரிய பாடல்களை இயற்றினர். தமிழிலக்கிய மேடைகள், தொழிலாளர் சங்கங்கள் இளைஞர் மன்றங்கள், சமயக் கழகங்கள் இவர்தம் செந்தமிழால் சிறப்புப் பெற்றன. அவருடைய நல்லெண்ணத்தாலும், நல்லுதவியாலும் மக்கள்

திருந்தினர் ; உயர்ந்தனர். அவருடைய நல்லுரைகளால் நல் வாழ்வு பெற்று நலிவு நீங்கினர்.

மாண்புடைத் தந்தை மறைவு :

திரு. வி. க. தூங்கிய நாட்கள் சில. தூங்காத நாட்கள் பல. இரவைப் பகலாகக் கருதி உழைத்தார். உழைத்த உடலுக்கு ஓய்வு தர மறைந்தார். தமிழகத் தந்தை எனப் பட்டம் பெற்றார். தமிழ் வளர்வதற்கு அரும்பாடுபட்டவர். 17—9—1953-ல் மறைந்தார் இவருடைய பூத உடம்பு மறைந்து புகழுடம்பு நிலைநின்று வருகிறது. வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்! வாழ்க அண்ணல் திரு. வி. க. வின் புகழ்!



பாட்டும் பயனும்

வெ. வரதராசன், எம். ஏ., முன்னுள் மாணவர்

❋

நந்தம் தாய்மொழியாம் செந்தமிழ் மொழியில் தீஞ்சுவைச் செய்யுள் பலபெற்று நெஞ்சைத் திறைகொள்ளும் இலக்கிய நூல்கள் பலஉள. அச்செய்யுள்களைக் கவிதை என்றும்; பாட்டு என்றும் கூறலாம். ஆன்ற பெருமையும் அறிவு வளமையும் மிக்கச் சான்றோர் பலர் அப்பாடல்களைப் பாடியுள்ளனர்.

அம்மாதிரியான கவிதை கவிதைக்காகவே (Poetry for poetry's sake) இருத்தல் வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். இதனை அவ்வளவு சிறந்த கருத்தாக, உயர்ந்த உண்மையாக உலகத்துப் பெருங்கவிஞர்களால் கொள்ளப்படவில்லை. ஏனெனில் கவிதை வாழ்க்கையினின்றும் பிறக்கிறது; வாழ்க்கைக்கு உரியது; வாழ்க்கைக்காகவே உள்ளது. (Poetry is made out of life; belongs to life; exists for life.) என்று W. H. ஹட்சன் என்ற அறிஞரும் நம்புகிருர். அதுமட்டுமல்ல, கவிஞனும் மனிதனே அவனும் இவ்வுலகில் வாழ்பவனே. அவனுக்கும் குறிக்கோளும் கொள்கையும் உண்டு. அதனுல் அவன் வெறும் பாட்டியற்றும் பாடகனுக மட்டும் இல்லாமல் வாழ்க்கையின் நுட்பங்களைப் புரிந்து கொண்டு; அதற்குப் புதிய புதிய விளக்கங்களைப் புகட்டும் ஆசானுகவும் அமைகிருன். வாழ்வில் ஏற்படும் தீமைகளையும் துன்பங்களையும் ஒழுக்கக் கேடுகளையும் கண்டு மனம் பொருது அவற்றைத் திருத்தி அமைக்கும் சீர்திருத்தக் காரனுகவும் திகழ்கிருன்.

ஆகவே, பாட்டின் பயன் இன்பம் தருவது மட்டு மன்று மனித மனதைப் பண்படுத்தி வாழ்வைப் பிற உயிர்களுக்கும் பயன்படச் செய்வது மாகும். உலக வாழ்வில் உழன்று திரியும் மனிதனின் புன்மைத்தன்மையைப்போக்கி

புனிதத்தன்மையை உண்டாக்குவதுமாகும். மறம் விலக்கி அறம் தழைக்க அடிகோலுவதுமாகும். இதனையே மெத்யூ ஆர்னல்டு என்ற அறிஞன் "ஒழுக்க முறைகளுக்கு முரண் படுகின்ற கவிதை வாழ்க்கைக்கும் முரணானதாகும் ஒழுக்க முறைகளைப் புறக்கணிக்கின்ற கவிதை வாழ்க்கையையும் புறக்கணிப்பதாகும்" என்று திட்டவட்டமாகக் கூறுகிறான்.

இவற்றிற்கும் மேலாகக் கவிதையின் பயன் மக்களுக்கு இயற்கையின் எழில் நலத்தை எடுத்துக்காட்டி அதைப்படைத்த ஆண்டவனின் அருள்திறத்தை மனத்தில் ஊட்டி, விண்ணக இன்பத்தினையும் மண்ணகத்தில் விளைவிப்பதுமாகும் இதனைப் பைந்தமிழ்த்தேர்ப்பாகன் பாரதியின் பாட்டில் காணமுடிகிறது.

காக்கைச் சிறகினிலே நந்தலாலா—நின்தன்
கரியநிறம் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா—நின்தன்
பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா

எனக்கன்னங்கரிய காக்கைச் சிறகிலும்; பசுமை நிறமுடைய மரங்களிலும் கண்ணனின் மேனியழகைக் காண்பதாகச் சொல்கிறார் கவிஞர்

வான வெளிதனிலே—கவிந்தெழு
மாலைப் பொழுதினிலே
கூனப்பிறை வரவே—சிவன்திருக்
கோலம் தெளிவேன், அடி
மேட்டு நிலங்களிலே—தினைக்கதிர்
விம்மி விளை கையிலே
காட்டு மயில்வரவே—குகனும் என்
காதல் விளைப்பார் அடி

என்று கவிமணி வானில் தவழும் கூனல் பிறை ஆலம் உண்டவனின் கோலம் காட்டுவதாகவும்; மேட்டு நிலங்களில் வரும் காட்டுமயில் கிள்ளை மொழி பயிலும் வள்ளிகணவனின் மீதுமையல் விளைவிப்பதாகவும் மனமகிழ்ந்து பாடுகிறார்.

இதுமட்டுமல்லாமல் பழகு தமிழ் மொழியில் அழகு ஒழுகப்பாடி கருங்கல் மனதையும் கரைந்துருகச்செய்யும் கணக்கற்ற சமயப்பாடல்களும் உள்ளன. அவற்றுள் மாணிக்க வாசகர் கண்ணுதற்கடவுளுக்குக் காணிக்கையாகத் தந்த திருவாசகமும் ஒன்று. தெய்வமணங்கமழும் இத்திருவாசகத்தை ஓதி உவப்படைந்த வடலூர் வள்ளலார்.

வான் கலந்த மாணிக்க வாசக ! நின்வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்சுவை கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

என்று உளமாரப் பாராட்டுகிறார். இதயத்தைக் கனிவிக்கும் இவ்வின்பத் தமிழ்ப் பாடல்களைச் சிந்தை இனிக்கச் சுவைத்த சிவப்பிரகாசச் சுவாமிகள் "மாணிக்கவாசகன் என்னும் மாமழை பெய்த திருவாசக வெள்ளம் அடியவருள்ளத்திலே பாய்ந்து சிவமெனும் மென்முளையைத் தோற்றுவித்து வீடாகிய மெய்ப் பயனைத் தருமென்கிறார்." மற்றோரிடத்தில்

திருவாசக மிங்கொருகால் ஓதில்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்பெய்தி
அன்பரா குனரன்றி
மன்பதை யுலகில் மற்றையோரிலரே.

என்று ஆணித்தரமாகக் கூறியுள்ளார்

உலக வாழ்க்கையில் பற்றும் பாசமும் அறுத்து துறவை மேற்கொண்ட மணிவாசகரின் பாடல்களால் உண்டான பயன்தான் இத்தன்மைத்து என்று நாம் நினைத்து விடக்கூடாது. வாழ்வில் விழைவும் விருப்பும் கொண்டு மனைவிமக்களிடத்து உறவை வளர்த்துக் கொண்டிருந்த பைந்தமிழ்த்தேனீ பாரதியின் பாடல்களின் பயனும் ஈடு இணையற்றவை என்றே தெள்ளு தமிழ்க்கவி தேசிக விநாயகம் நெஞ்சை அள்ளும் கவிதைகளில் அழகொழுக விள்ளுகிறார். இதோ பாட்டுக்கள் :

பாட்டுக் கொருபுலவன் பாரதி அடா—அவன்
பாட்டைப் பண்ணேடொருவன் பாடினன் அடா!
கேட்டுக்கிறுகிறுத்துப் போனேனே அடா-அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய் அடா

* * * *

உள்ளந் தெளியு மொரு பாட்டிலே, அடா—மிக்க
ஊக்கம் பிறக்கு மொரு பாட்டிலே, அடா
கள்ளின் வெறிகொளுமோர் பாட்டிலே அடா ஊற்றுய்க்
கண்ணீர் சொரிந்திடு மோர் பாட்டிலே அடா.

ஒளியின்றி வாழும் மக்களுக்குத் தெளிவைத் தருதலும், அடிமையில் உழன்ற மக்கள் மிடிமை நீக்கிவிழித்தெழ ஊக்கம் பிறப்பித்தலும்; காதல்சுவையாலும் கவிதை எழிலாலும் கள்ளின்பம் அளித்தலும்; ஏழை எளியோரின் கண்ணீரைக் கவிதையாக்கி கற்பவரின் கண்களிலும் நீர்மல்கச் செய்தலும் பாரதிபாடல்களின் பயன்களாக இவர்கருதுகின்றுர்.

பொதுவாகக் கவிதை சமுதாயத்தைப் பிணித்துள்ள இன்னல்களையும், தனிமனிதனைப் பீடித்துள்ள மனப்பிணிகளையும் மாய்த்தல் வேண்டும். வையகமாந்தர் பசியும் பிணியும் அற்றுவசியும் வளனும் பெற்று வாழ்வாங்குவாழ வழிவகுப்பதே பாட்டின் பயன்.

ஆங்கிலத் தத்துவப் பேரறிஞரும், பொருளாதார மேதையுமான ஜான் ஸ்டூவர்ட்மில் என்பவர் தனது வாழ்க்கை வானில் துன்ப மேகங்கள் கவிந்தெழுந்து, தன் மனநிலை பாதிக்கப்பட்டு, வெறுப்பும் வேதனையும் கொண்டிருந்த போது வேர்ட்ஸ் வொர்த் என்ற கவிஞனின் கவிதைகள் எங்ஙனம் பயன் பட்டன என்பதைக் கீழ்வருமாறு தன்வாழ்க்கை வரலாற்றில் எழுதியுள்ளார்.

"வேர்ட்ஸ் வொர்த்தின் கவிதைகள் எனது மனப்புண்ணை மாற்ற மாமருந்தாய்ப் பயன்பட்டன. அவை புறஉலக அழகை மட்டும் அளிக்கவில்லை. அழகின் எழுச்சியால் உண்டான உயர்ந்த எண்ணங்களோடு கூடிய உணர்ச்சிகளை ஏற்படுத்தின.

நான் எதைத்தேடியலைந்தேனோ அதேமேம்பட்ட உணர்வுகளைப் பிறப்பித்து என் உள்ளமும் உடலும் நலமுறச்செய்தன. அவற்றில் உள்ளீடான ஓர் இன்பஊற்று எனக்குக்கிடைத்தது. இரக்கத்தோடு கூடிய கற்பனை இன்பம் கிடைத்தது. அது மனிதஇனமே பகிர்ந்து அனுபவிக்கக்கூடியது அவற்றால் நிரந்தரமான மகிழ்ச்சியின் 'மூலம்' எது என்பதை நான் அறிந்து கொண்டேன். அக்கவிதைகளின் ஆற்றலால் நான் உடனடியான மகிழ்ச்சி பெற்று உடல் நலமும் பெற்றேன்." என்கிறார்.

பாட்டின் பயன் இதுதான்.

"கைத்தறியின் சிறப்பு"

எஸ். ஏ. இராசன்,
ஒன்பதாம் உயர் வகுப்பு 'ஆ' பிரிவு

*

சின்னச்சின்ன இழையினை பின்னிப்பின்னிக் காட்டியே
வண்ணவண்ண மாகநெய்த கண்ணைக்கவரும் வேட்டியே

அன்னத்தினும் மென்மையாம் ஆடையிது கைத்தறி
என்றுமிதை நீதரித்து அன்புடனே ஆதரி

பொங்கும்பாலின் வெண்மைஆவி போலிருக்கும் இத்துணி
நங்கைநல்லாள் நாடிவாங்கும் நலம்சிறந்த நல்லணி

சங்கம்புகழ் தங்கநாட்டில் நெய்துவந்த இத்துணி
சரித்திரத்தில் தனிப்பெருமை கொண்டுவிட்ட நல்லணி

வெளிநாடுகள் விரும்பிவாங்கும் வெல்லக்கட்டி இத்துணி
வெண்ணிறத்தில் வெண்ணிலவை வென்றுவிட்ட நல்லணி.

(நித்தியம் Eternity)

(ஒரு முன்னாள் மாணவன்)

❋

பள்ளிக்குச் செல்லும் மாணவன் ஒருவனை அடுத்து தம்பி! நீ படித்து முடித்தபின் என்ன செய்யப்போகிருய் என்று வினவினல் ஒருவேளை அவன் ஐயா நான் ஒரு டாக்டராக விரும்புகிறேன் " என் பதிலிறுக்கக்கூடும் வேருெருவன் 'நான் இன்ஜினியராக விரும்புகிறேன் " என்பான் சிலர் நேருவைப் போல் சிறந்த தலைவராக விரும்புவர். இன்னும் சிலர் சிவாஜி போன்ற வீரனுக விரும்புவார். எவ்விதமிருப்பினும் ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும் தன் எதிர்காலத்தைக் குறித்து ஓர் ஆசை யுடையவராய், ஓர் குறிக்கோள் உடையவராகவே இருப்பர் ஆனல் அவ்வெதிர்காலம் எத்தனை வருடங்கள் அல்லது எத்தனை மாதங்கள் நீடிக்கக்கூடியது என்பதை அறியும் திறன் அவர்கட் கில்லை மாத்திரமன்று எதிர்காலம் இரண்டு பகுதிகளை கொண் டது என்பதையும் அன்னுர் அறியார் அவர்கள் கனவெல்லாம் இவ்வுலகின்கண் இருக்கப்போகும் நாட்களை மாத்திரமே சுற்றி சுழலுகிறது இந்நாட்களை மரணம் ஒருநாள் முடிவுபெறச் செய்யும்! அதன்பின்.....! அதன்பின் தானே எதிர்காலத்தின் பெரும்பகுதி தொடங்குகிறது! அதற்கோர் முடிவில்லை! அதுவே நித்தியம் என்றழைக்கப்படுகிறது.

மரணத்திற்கு பின் ஒருவனுக்கு நேர்வதென்ன? அல்லது நித்தியத்தில் சம்பவிப்பது என்ன? அசோகன் என்ற மாணவ னின் பிஞ்சு உள்ளத்தில் இக்கேள்வி எழும்பியது அக்கேள்விக் குப் பதிலிருக்கும் முகனுக தென் ஆப்ரிக்காவில் உள்ள ரோலன்ஸ் என்ற தெய்வ ஊழியர் எழுதிய ஓர் கடிதத்தை அப் படியே தருகிறோம்

ரோலன்ஸ், ஓர் சிறந்த தெய்வத் தொண்டர் ஆப்பிரிக் காவில் நசுக்கப்பட்டு, நொறுக்கப்பட்டுவரும் நம் இந்திய சகோ தர சகோதரிகள் மத்தியில் கிறிஸ்துவின் அன்பை ஊற்றி அவர் கட்கோர் உற்ற நண்பருய் இருந்து வருகிருர். அவரிடமிருந்து

வருடத்திற்கு சுமார் 8000 கடிதங்கள் உலகெங்கும் செல்கின்றன. அவர்மேல் பொறாமை கொண்டோர், அவருக்கு 9 தடவை விஷமிட்டனர்! மந்திரவாதங்கள் செய்தனர்! துப்பாக்கிக் குண்டுகளாலும் கற்களாலும் கொன்றுவிட முயற்சி செய்தனர். ஆனால் இவை எல்லாவற்றிலிருந்தும் தேவனாகிய கிறிஸ்து அவரை ஆச்சரியமாய் காப்பாற்றினார், காப்பாற்றி வருகிறார். “உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்” (ஏசாயா 45 : 17) என்பது மெய்யடியார்க்கு கர்த்தன் கிறிஸ்து கொடுத்துள்ள கேடகமன்றே !

நல்லது ! அசோகனுடன் அன்பே உருவான ரோலன்ஸ் பேசக் கேட்போம். அன்பான மாணவ சகோதரனே ! சகோதரியே ! நித்தியத்தை எங்கே கழிக்கப் போகிறாய் என்று நீயும் அசோகனுடன் சேர்ந்து இன்றே முடிவு செய் !

எனதன்புள்ள அசோகன்,

உனது கடிதம் கிடைத்தது மிகுந்த நன்றி உனது கடிதம் சுருக்கமானது; ஆனால் கருத்து நிறைந்தது. உன்னுடைய கேள்வி எவ்வளவு பெரியது தெரியுமா? நித்தியத்தைப்பற்றி அறிய நீ ஆவல்கொண்டிருக்கிறாய். அது நல்லதுதான். விஷயமோ பெரிது நித்தியம் கங்கு கரை காணாத ஒரு பெருங் கடல்; காலம் அதில் அமைந்த ஒரு சின்னஞ் சிறு தீவு

இந்தச் சின்னஞ்சிறு தீவில்தான் நீயும் நானும் வசிக்கிறோம். எந்த நேரத்திலும் மரணம் வந்து நம்மை நித்திய சமுத்திரத்திற்கு வாரிக்கொண்டு போகலாம். ஆதலின் இந்த நித்திய வாழ்வில் பிரவேசிப்பதற்கு நாம் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

தேவன் நித்தியமானவர். அவர் நித்தியத்திலிருந்து நித்தியத்திற்குத் தேவன்.

நாம் மரித்ததும், நித்தியத்திற்குள் பிரவேசிக்கிறோம். ஆதலால், இப்பொழுதே நாம் எப்படி ஜீவிக்கவேண்டும் என்பது பற்றி அதிகக் கவனம் செலுத்தவேண்டும். இன்று முடிவுக்கு வராவிட்டால் மரித்த பிறகு அதைப்பற்றி சிந்திக்க முடியாது.

"மரணம் ஐந்து நிமிடம் தாமதித்து வந்திருக்குமானால், நல்ல தீர்மானத்திற்கு வரப்பார்த்தேனே! அந்தோ! அதற்குள் என்னை வாரிக்கொண்டதே!" என்று தவிக்க நேரிடும்.

நித்தியம் — எவ்வளவு நீண்டகாலம்! அதைக் கோடா கோடி வருடங்கள் அல்லது யுகங்கள் என்று சொன்னால் போதுமா? போதாதே! கோடா கோடி என்பது எவ்வளவு? கோடியைக் கோடியால் பெருக்கினால் கோடாகோடி. ஒரு நிமிடத்தில் வேகமாக எவ்வளவு எண்ணுவாய்? இருநூறு எண்ணுவாயா? அந்த வேகத்தில் எண்ணினாலும் கோடா கோடியை எண்ணுவதற்கு அநேக ஆயிரமாண்டுகள் பிடிக்கும். அப்படியானால், கோடா கோடி வருடங்கள்.........? நினைக்கவே முடியவில்லையே.

கோடா கோடி ஆண்டுகள் பரத்திலாவது அல்லது நரகத்திலாவது நாம் ஜீவிக்கவேண்டும்! முதலில் ஒரு கோடா கோடி வருடங்கள்; அது கழிந்தால், மற்றொரு கோடாகோடி வருடங்கள். இப்படி எத்தனை கோடா கோடியோ? எப்பொழுதும் நித்தியத்தின் ஓரத்தில்தான் நிற்போம்! அசோகா, நித்தியத்திற்கு நீ தப்ப முடியாது நீ விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இதுவே உண்மை. நீ (ஆத்மா) அழிவில்லாதவன். நித்தியத்தைச் சந்திக்கத்தான் வேண்டும் என்றும் பரலோகத்தில் நித்தியமாய் வாழவேண்டும். இல்லாவிட்டால் நரகத்தில் என்றென்றைக்கும் வருந்த வேண்டும்.

என் மகனே! இந்த விஷயத்தில் நீ பிழை விடக்கூடாது. கவனமாய் சிந்தனை செய் இவ்வுலகத்திற்கு மாத்திரம் நீ ஜீவிப்பாயானால், அது பெருந் தவறு. கிறிஸ்துவின்றி நீ மரித்தால், இரட்சிப்பின்றி மரிப்பாய்! மரணத்திற்குப் பிறகு அதற்குப் பரிகாரம் தேட முடியாது,

வேதாகமத்தில் நித்திய அக்கினி, நித்திய ஆக்கினை (மத்தேயு 25:41, 46) என்பவைகளுக்கும், அநாதி தேவன் (ரோமர் 16.25) நித்திய ஜீவன் (யோவான் 4:16) என்பதற்கும் நித்தியம் என்ற பொருளில் ஒரே கிரேக்க பதம் உபயோகிக்கப் பட்டுள்ளது. இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் தங்கள் நித்தியத்தை பரலோகத்தில் கழிப்பார்கள். அவரால் இலவசமாய்

அருளப்பட்டுள்ள இரட்சிப்பை தள்ளிவிட்டவர்கள் தங்கள் நித்தியத்தை நரகத்தில் கழிப்பார்கள் நரகமும் தேவனைப்போல் நித்தியமானது !

இவ்வாழ்வு அற்பமானது; மேலும் காலம் தாழ்த்தக் கூடாதபடி அவ்வளவாய்க் குறுகியது ! ஆத்மா நஷ்டப்படக் கூடாத அவ்வளவு விலையேறப்பெற்றது ! இரட்சிப்பின் சுவி சேஷமோ விலக்கி வைக்க முடியாதபடி அற்புதமானது !

இன்றே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி ! உன் ஜீவிய நாட்கள் முழுமைக்கும் ஒரு தடவையாக, இன்றே தீர் மானம் செய் அப்பொழுது நித்தியத்தைப் பரலோகத்தில் கழிப்பாய்.

உனது அன்புள்ள,

— ரோலன்ஸ்

போன் 16

கடலூர் O. T. குட்ஸ்ஷெட் எதிரில் உள்ள

மரவாடியில்

கட்டிட வேலைகளுக்குத் தேவையான மரம், சயிஸ்கள், பலகை, பட்டை, ஓடு முதலியன குறைந்த விலையில் கிடைக்கும்.

*

எஸ். எம். & சன்ஸ்,

மர வியாபாரம் :: கடலூர் O. T.

தலைமை ஆபீஸ்: சிதம்பரம்

வள்ளுவரும் வாயுறை வாழ்த்தும்

ஆ. பாலசுப்பிரமணியன், புதிய பத்தாம் வகுப்பு

❊

முன்னுரை :

உலகக் கவிகளுள் சிறந்த கவி திருவள்ளுவர். இவரால் இயற்றப்பட்ட திருக்குறள் உலக மக்களனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துக்களை உடைய நூலாகும். நாயனார் நூல் நவில்வோர் நெஞ்சத்தில் நவில்தொறும் நல்லதோர் நயத்-தினையும் நலத்தினையும் நல்கும் தகையது. அந்நூலைப்பற்றியும், நாயனாரைப்பற்றியும் பிறகவிகள் கூறிய புகழுரைகளைக் கீழே காணும் கட்டுரையில் நாம் காணுவோம்.

வள்ளுவரின் வாழ்க்கை வரலாறு :

1800 ஆண்டுகளுக்கு முன்தோன்றிய கவி திருவள்ளுவர். சென்னையை அடுத்துள்ள மயிலாப்பூரில் வள்ளுவ குலத்தில் பிறந்தார் அரசரின் கீழ் உள்படு கருமத் தலைவராக பணியாற்றினார். இவர் தாய் ஆதியும், தந்தை பகவனுமாவர். வாசுகி அம்மையார் இவருடைய இல்லக்கிழத்தியாவள்.

திரிபின்றித் திகழும் திருக்குறள் :

திரிபின்றித் திகழும் திருக்குறள் பதினெண் கீழ்க்கணக்கு நூலைச் சார்ந்ததாகும். இந்த நூலானது அதிகாரத்திற்கு பத்துக் குறள்கள்வீதம் நூற்று முப்பத்திமூன்று அதிகாரங்களை உடையதாகும். மக்கள் அடையவேண்டிய உறுதிப்பேறுகளை அறம், பொருள், இன்பம், வீடு என நாற்கூறாகப் பிரிப்பர். திரு-வள்ளுவர் தமது நூலில் அறத்துப்பால் பொருட்பால் என முதல் மூன்று பேறுகளைக் குறிப்பிட்டுள்ளார். வீடானது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகையால் திருவள்ளுவர் வீட்டி-னைப்பற்றி இலக்கண முறையாகக் கூறவில்லை. ஆனால் துறவறம் பூண்டொழுகின்ற காரணத்தால் வீடுபேறு ஒன்று உண்டு எனத் தெரிந்து முப்பாலிலும் நாற்பாலைப் பொழிந்துள்ளார்.

நூலைப்பற்றிய உரை :

யாவரும் விரும்பும் மேன்மை பொருந்திய வெண்பாக் குறள்களால் ஆன நூல் திருக்குறள், அறத்தினைப்பற்றி அறிவுறுத்துகிறது இந்நூல். தம்மறிவின் உச்சியினின்று திருவள்ளுவர் திருக்குறளை ஓதுகின்றாராதலின் அவர் கூறும் மொழிகள் உண்மை மொழிகள், உள்ளிருந்தெழும் கருத்துக்களை உணர்த்துகின்றாராதலின் அவர் மொழிகள் உண்மை மொழிகள். வேதத்தினும் சிறந்தது இந்நூல், சுருங்கிய சொல்லால் விரிந்த பொருள் தருவது இந்நூல்,

நாயனாரைப்பற்றிய பிற கவிஞர்களின் புகழுரைகள் :

உலகிலே திருவள்ளுவரையன்றி வேறொருவரை புலவர் எனக்கொள்ளுதல் நிலவால் விளங்கும் அந்திக்கும் பெயராக மற்றும் சூழ்கின்ற இருளை உடைய அந்திக்கும் பெயராக மாலையைக் கூறுதல் ஒக்கும் என்று செங்குன்றூர்க்கிழார் செப்புகின்றார்.

அமரகவி பாரதியும் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என வள்ளுவனைப் பற்றிப் புகழ்ந்துரைத்துள்ளார். சுருங்கிய சொல்லால் பொருள் விளங்க விரிவாகச் சொல்ல வல்லார் வள்ளுவரையன்றி ஒருவருமில்லை என அரிசில்கிழார் கூறுகின்றார்.

தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் நான்முகனே திருவள்ளுவனாகி வடமொழியிலிருந்த வேதத்தை எல்லோரும் படித்துப் பயனடைய தமிழில் செய்து தந்தான் எனக் காரிக்கண்ணனார் கூறுகின்றார்.

நூலைப்பற்றிய பிற கவியின் புகழுரைகள் :

நாளத்தோடு பொருந்திய தாமரை மலர்களை உடைய தடாகத்திலே மூழ்குவோர் வேறொரு தடாகத்திலுள்ள நீரை விரும்பாதிருப்பதுபோல வள்ளுவருடைய வாயுறை வாழ்த்தில் உள்ள முப்பாலில் தோய்பவர் வேறொரு நூலை விரும்பார் என நாகன்தேவனார் என்ற புலவர் புகலுகின்றார்.

இரண்டு பெரிய அடிகளால் உலகமனைத்தையும் திருமால் அளந்ததைப்போல் வள்ளுவரும் வெண்பாக் குறளின் இரண்டு சிறிய அடிகளால் உலகமனைத்திலுமுள்ளோரால் நினைக்கப்பட்ட-வற்றையெல்லாம் ஆராய்ந்து அளந்தாரென பரணர் பகருகின்ருர்.

பொதுமறை படிப்பதினவசியம் :

ஔவையார் 'பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்'' எனக் கூறுவதால் திருக்குறளை கற்கவேண்டியதின் அவசியம் விளங்கும்,

''அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்''

என்று ஔவையார் பகர்வதால் குறளின் மேன்மை புலப் படுகின்றது.

மணலைத் தோண்டுந்தோறும் நீர் பெருகுவதைப்போல வாய்மையுடைய வள்ளுவரின் வாயுறை வாழ்த்தினை ஆராயுந் தோறும் அறிவுடைய புலவருக்கு அறிவு வளரும் என்று உருத்-சன்மன் உரைக்கின்ருர்

வேதத்தினும் சிறந்த குறள் வெண்பா ஓதலினுல் உலக மானது வழுவுதலினின்றும் நீங்கிற்று என பெருமருதனுர் பகருகின்ருர்.

முடிவுரை :

''ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலுமிரண்டும் சொல்-லுக்குறுதி என்ற பழமொழியிலிருந்து குறளின் சொல்வன்மை விளங்கும். ஏராளமான மொழிகளிலே குறளை மொழி பெயர்ப்பு செய்துள்ளது தமிழ் மொழிக்கு நல்ல புகழைத் தருகின்றது. சூரியன், சந்திரன் புறத்திருளை நீக்கும் ஒளிகளாகும்; அவைபோல வாயுறை வாழ்த்தானது உலகமக்களின் உள்ளிருளை நீக்கும் ஒளிகளாகும் என்று பாலாசிரியனுர் பகருகின்ருர். எனவே நாமும் உலகம் போற்றும் வாயுறை வாழ்த்தினை வாசித்து அவ்-வழி நடப்போமாக.''

கண்ணாடித் துண்டு

வெ. சீனுவாசன், *இரண்டாம் படிவம் " அ " பிரிவு*

✽

இணைபிரியாத நண்பர்களான குமாரும், பாலும் எதிர் வீட்டில் வசித்து வந்தார்கள். பாலு சாரணன். இருவரும் பள்ளிக்குச்செல்லும்போது, வழியில் ஒரு கண்ணாடித்துண்டு கிடந்ததைக்கண்டார்கள். அதைப்பாலு எடுத்து சாலையின் ஓரமாகப்போட்டான். குமார் பாலுவைப்பற்றி ஏளனமாகப் பேசினான் பாலு அதற்குப்பணிந்து ஒன்றும் கூறாமல் பள்ளிக்கு நடந்தான்.

பள்ளியில் கணக்கு வகுப்பில் குமார், பாலுவைப் பார்த்து கணக்குப்போட்டான். அதை ஆசிரியர் பார்த்து விட்டார். ஆசிரியர் குமாரை அழைத்து " ஏன் கணக்குப் பாடத்தில் கள்ளக்காப்பி அடித்தாய் " என்று கேட்டார். அதற்கு குமார் " நான் காப்பு அடிக்கவில்லை சார் " என்று சொன்னான். " பொய் சொல்லாதே போய் உட்கார் " என்றார் ஆசிரியர் பிறகு பள்ளிமுடிந்தது. பாலு, குமார், இன்னும் சில மாணவர்களும் சேர்ந்து வரும் பொழுது ஒருவன் குமாரைப் பார்த்து, " நீ கணக்கு வகுப்பில் கள்ளக்காப்பி அடித்தாய் நாங்கள் காப்பி அடிக்காமலே செய்து விட்டோம் " என்றான் குமாருக்கு ஆத்திரம் தாங்காமல் அவன் கன்னத்தில் பளீர் " என்று அறைந்தான். இருவருக்கும் சண்டை உண்டாயிற்று. பாலுவும் மற்ற மாணவர்களும் சேர்ந்து சண்டையை விலக்கினர் கன்னத்தில் அறை வாங்கியவனிடம் பாலு, " ஒரு கன்னத்தில் அறைந்தால் நீ மற்றொரு கன்னத்தைக் காட்டு. அது தான் சண்டையிடாமல் இருப்பதற்கு வழி " என்றான். குமாரைப் பார்த்து " நீ அவனை அறைந்துவிட்டாய் அதனால் உனக்கு என்ன நன்மை ? உன் கைதான் வீணாக வலிக்கும் " என்றான் பாலு. அதற்குள் குமார் வீடும், பாலு வீடும் வந்தது. இருவரும் அவரவர் வீட்டிற்குச் சென்றனர். மறுநாள் குமாரையும், கன்னத்தில் அறைவாங்கிய பையனையும் ஒற்றுமைப் படுத்தி பேசவைத்தான் பாலு பள்ளி விட்டு திரும்பி

வரும்போது வழியில் ஒரு வாழைப்பழத்தோல் கிடந்தது. அதில் குமார் காலை வைக்கச்சென்ருன். உடனே பாலு அதை எடுத்துவிட்டான்.

அப்போது குமார் பாலுவை ஏளனம் செய்தான். "நான் மட்டும் வாழைப்பழத்தோலை எடுக்காவிடில் நீ விழ நேரிடுமே" என்ருன் பாலு. "நான் விழமாட்டேன். நான் தப்பித்துக்கொள்வேன்" என்ருன் குமார். பிறகு இருவரும் வீட்டிற்குச் சென்றனர். மறுநாள் பள்ளிக்கூடம் விட்ட பிறகு சாரணர் இயக்கக்கூட்டம் கூடிற்று. அதற்காகப் பாலு குமாரையும் அழைத்துச்சென்ருன். அங்கு பலவித விளையாட்டுக் கள் நடைபெற்றன பாட்டுக்களும் பாடப்பெற்றன பிறகு ஆசிரியர் பலவித நல்லுரைகளைக்கூறிஞர். பிறகு நாட்டு வணக்கம் பாட கூட்டம் முடிந்தது. வரும்போது குமார் பாலுவைப்பார்த்து "நானும்சாரணர் இயக்கத்தில் சேரவிரும்பு கிறேன்" என்ருன். இப்படிப்பேசிக்கொண்டே வரும்போது குமார் காலில் ஒரு சிறிய கண்ணுடித் துண்டு குத்திவிடவே இரத்தம் வந்தது. உடனே பாலுவும், இன்னும் சில மாணவர் களும் சேர்ந்து குமாரைத் தூக்கிக் கொண்டு மருத்துவ விடுதிக்குச் சென்றனர். அங்கே குமாருக்குச் சிகிச்சை செய்யப்பட்டது. மாணவர்கள் குமாரைத் தூக்கிக்கொண்டு அவன் வீட்டிற்குச் சென்றனர். அவனுடைய தந்தை என் மகனுக்கு என்ன நேரிட்டதோ என்று அலறிஞர். தாயும் அலறிஞள். அதற்குப் பாலு "சிறு கண்ணுடித்துண்டுதான் குத்திவிட்டது. வேறென்றும் இல்லை" என்ருன். "ஆம் அப்பா, பாலு வீதியில் கிடக்கும் கண்ணுடித்துண்டுகளை எல்லாம் தூக்கி ஓரத்தில் போடுவான். நான் அவனைப்பார்த்து ஏளனம்செய்வேன். இன்று கண்ணுடித்துண்டு என் காலையே பதம்பார்த்துவிட்டது நான் இனி சாரணர் இயக்கத்தில் சேர்ந்து நல்லவனுகத் திகழ்வேன்" என்ருன் குமார்.

வாழ்க சாரணர்! வளர்க சாரணீயம் என்ருர் குமாரின் தந்தையார்.

நமது தாய் மொழி

ப. சண்முகம், 3-ம் படிவம் "அ" பிரிவு.

✻

மக்கள் அறிவு வளர்ச்சிக்கு இன்றிமையாத சர்தனமாய் இருப்பது மொழி எனப்படும். மொழியே மக்களை மாக்களி னின்றும் வேறுபடுத்துவதாகும். இப்பொழுது உலக மக்களால் எண்ணிறந்த மொழிகள் பேசப்படுகின்றன. மனிதன் தனக்கு ஏற்பட்ட கருத்தை பிறர்க்கு எடுத்துகூற சாதனமாய் இருப்பது மொழியே. எம்மொழி எவ்வினத்தவரால் வழிவழியாகப் பேசப்படுகிறதோ அம்மொழி அவ்வினத்தவருக்குத் தாய்மொழி யாகும். 'காக்கைக்கு தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பதுபோல ஒவ்வொருவருக்கும் அவரவர் தாய்மொழி மதிப்பிற் குரியதே

நம் தாய்மொழியாகிய தமிழ் இன்ன காலத்தில்தான் தோன்றியது என்று வரையறுக்க முடியாத அத்துணைப் பழைமை வாய்ந்தது. தமிழ் மிக்க இனிமையுடைய மொழி, இலக்கண வரம்புடைய மொழி. தொன்றுதொட்டு பாவலர் பலராலும் பாராட்டப்படும் பண்டைமொழியாகும். பண்டைத் தமிழ்ப் புலவர்கள் தமிழ் மொழியைக் குறிக்குமிடத்தெல்லாம் தமிழைத் தனித்துக் கூறுது செந்தமிழ், பைந்தமிழ் வண்டமிழ், ஒண் டமிழ், மென்றமிழ், கன்னித்தமிழ் என்று அடைமொழி கொடுத்தே அழைத்து வரலானுர்கள். எனவேதான், பன்னிரு மொழிகற்ற பாரதியாரே தமிழை "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணேம்" என்று கூறியிருக்கிருர் தமிழ் என்ற சொல்லுக்கே இனிமை என்பது பொருளாம். தமிழ்த்தாய் தன் இனிமையால் கடவுளரையும்கூட வயக்கும் இயல்பின தாதல்பற்றியே இராமலிங்க அடிகள். தாயுமானவர், திருஞானசம்பந்தர் ஆகிய புலவர்கள் தமிழைக் கருவியாகக்கொண்டு பாடியுள்ளார்கள்.

தமிழ் அவ்வாறு இனிமையாவதற்கு காரணம் அதன் மென்மை, எளிமை, தெளிவு முதலியனவாகும். தமிழர்களது மானம், வீரம், நீதி, சான்ருண்மை முதலியன நன்கு அறியப்படும்

'திருக்குறள்' என்னும் செந்தமிழ் மறையானது தமிழர்களின் தனி நாகரீகத்தின் அடையாளமாகும். தமிழிலிருந்து பல மொழிகள் பிரிந்திருக்கின்றன. அவைகளே, கன்னடம், தெலுங்கு, துளுமலையாளம் முதலிய மொழிகளாகும்.

ஓர் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது குறுக்கே அணைகட்டித் தடுத்தல் கூடாதெனினும், அதன் போக்கிலேயே விட்டு பாழாகாதபடி கரைகோலி கண்வாய்களின் வழியே நீரைப்பாய்ச்சி பொருட்களை விளைவிப்பது அறிவுடைமையாகும். அதுபோன்று மொழியினையும் ஒரு வரம்புக்கு உட்பட்டு வளரும்படி செய்து மக்களுக்கு பயன்விளைத்தல்வேண்டும். எனவே மாணவர்களாகிய நாம் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்று ஒற்றுமையுடன் நம் தாய்மொழிக்கு நம்மாலியன்ற உதவியைச் செய்யவேண்டும்.

வளர்க நம் ஒற்றுமை! வளர்க நம் தாய்மொழிப்பற்று!!

வணக்கம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

● உயர்ந்த ரகங்களில் ● சிறந்த தயாரிப்பில்
● குறைந்த விலையில்

பேப்பர் & நோட்புக், பேனா, பென்சில் வகைகள் கிடைக்குமிடம்

T. S. சங்கரசுப்பிரமணியம்,

பேப்பர், நோட்புக் & ஜெனரல் மர்ச்சண்ட்,

5, தேரடி வீதி :: திருப்பாதிரிப்புலியூர்

179567
600 005



V. Kaliyaperumal,
VIII Std. B. S.

S. S. Rajan.

IX Std. A. S.

யுவராஜ்! நீ! துரோகி!

J. A.

இரவு நேரம். 'டங்' என்ற ஓசை கேட்டது. ஆமாம்! தலைக்கு நேரே தொங்கிக்கொண்டிருந்த கடிகாரம் ஒருமுறை அடித்து ஓய்ந்தது! நிமிர்ந்து பார்த்தேன். அடடா! மணி 10-30 ஆகிவிட்டதே! தூக்கம் கண்ணைச் சுழற்றியது. வாசித்துக்கொண்டிருந்த கதைப்புத்தகத்தை மூடிவிட்டு, விளக்கை அணைக்கப்போனேன். "அம்மா! அம்மா! கொஞ்சம் பொறுங்களேன்", கெஞ்சினான்—என் மகன். ஆஹா! அவன் கையில் ஒரு சமூகப் புத்தகம்! படிப்பதாகப் பாவனை செய்து கொண்டிருந்தான்!

"என்னடா? ஏன்?"

"ஒரு சந்தேகம் அம்மா"

"அட! சட்! நீ படிக்கிற அழகிற்கு உனக்கு சந்தேகம்கூட உதிக்கிறதோ"

"இல்லை... வந்து... வந்து... ஆமாம்! அம்மா!"

"என்னடா! உளறல். என்ன சந்தேகம்? யாரைப் பற்றி?"

"இல்லை! வந்து... இந்த 'ஔரங்கசீப்பைப்' பற்றியது அம்மா"

"ஓஹோ! சரி! அவனுக்கு என்ன?"

பையன் நிஜமாகவே அல்லவா கேள்வி கேட்கிறான். தூக்கம் கலைந்தது! சற்று விழிப்பாகவே கேட்கலானேன்!

"அம்மா! இந்த ஔரங்கசீப் நாட்டாசை கொண்டு, தன் தகப்பனை சிறையிலடைத்து, சகோதரரைக் கொன்று, ஆசையுடன் அரசாட்சியை ஏற்றுக்கொண்டானே! அம்மா! ஆனால்! ஏன் அம்மா? முடிவில் எல்லா ஆடம்பரத்தையும்

விட்டுவிட்டு, குல்லாய்கள் தைத்தும், கொர்ரானை எழுதியும் வாழ்ந்து வந்தான் ? ஏன் அம்மா ? ஏன் அப்படி ?''

" உ...ம் உ...ம் வந்து, வந்து "

" என்ன அம்மா ! வந்தாவது, போயாவது ! பதில் சொல்லுங்கள் அம்மா ! என் கேள்விக்கு !''

" அடடா ! இக்காலத்துப் பிள்ளைகளின் கேள்விகட்கு நாம் பதில் சொல்லாவிட்டால், நம்மைச் சற்றுவது மதிக்கிருர்களா ? அட சட் !

" அம்மா ! தூக்கமா ? என்ன ?''

" இல்லையடா ! அது பெரிய கதையாச்சுதே ! இப்போது சொல்ல நேரமில்லை. விடியட்டும், காலையில் கட்டாயமாகச் சொல்கிறேன். போடா ! போய் இப்போது படுத்துத் தூங்கு''
" சரி அம்மா " — பையன் படுக்கச்சென்ருன்.

விடிவதற்குள் கதை தயாராகவேண்டுமே ! இது என்ன ? இப்படி ஓர் கேள்வியைக் கேட்டு நாம் திணறவேண்டுமோ ! அட ! கடவுளே !

பேனுவைக் கையில் எடுத்தேன் !

கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டேன் !

ஆஹா ! இதோ நீங்களும் வாசியுங்கள் இக்கதையை !

2

" ஐயோ ! யுவராஜ் ! யுவராஜ் ! என்னை விட்டுவிடு !'' கதறிஞள் அப்பேதை 'ஜென்னி'! பாதாள சிறையில் அவள் அடைக்கப்பட்டிருந்தாள் ! அவனே ! அலட்சியமாக, அப் பேதைப் பெண்ணின் கூக்குரலைக் கேட்காமல், கெம்பீரமாகப் படிக்கட்டுகளின் மேல் ஏறி வெளியே போய்க்கொண்டிருந்தான் ! அச்சிறைக் கதவின் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு கதறிக் கதறி அழுதாள். எவ்வளவு நேரமாக அழுதாளோ ? தெரியாது ! உள்ளம் சோர்வுற்றது ! உடல் தள்ளாடியது ! மேலும் நிற்க, கால்கள் மறுத்தன ! தீவட்டி ஒன்று பிரகாசமாக

எரிந்துக்கொண்டிருந்தது! அவ்வொளியில் அவள் கண்கள் கொவ்வைக் கனிகள்போல் காட்சி அளித்தன!

அச்சிறைக் கூடத்தில் அவளைத் தவிர வேறு யாரும் கிடையாது! அவளுக்காக பரிதபிப்போரும் கிடையாது! அவள் ஓர் அனாதை! அவள் தலை சுற்றியது! ஒருநாள் முழுவதும் பட்டினி! எதிரே இருந்த மட்பாண்டத்திலுள்ள நீரை மொண்டு முகத்தைக் கழுவினாள்! ஒரு வேளை நீரையும் பருகினாள்! அவள் களைப்பு சற்றே நீங்கியது! ஆனால்! அவள் மனத்தின் அடித்தளத்தில் அழுந்திக் கிடந்த பாரம் தீரவில்லை! தன் தகப்பன் இறப்பதற்கு முன் சொன்ன வார்த்தைகள் அவள் காதுகளில் ரீங்காரமிட்டன! அவற்றை எங்ஙனம் மறப்பது! ஐயோ! அவை எத்தனை உண்மையாகிவிட்டன!

3

"குழந்தாய்! ஜென்னி! கூப்பிட்டார், மர்கேஷியஸ்!"

"அப்பா"

"இப்படி உட்காரம்மா! என்னால் எழுந்திருக்கக்கூட முடியவில்லை! என் நோவு தீராத நோவாகிவிட்டது! இது என் ஆயுளோடுதான் முடியும்."

"ஏன்! அப்பா! இப்படியே நீங்கள் அடிக்கடி கூறினால் நான் இந்த அந்நிய நாட்டில் அனாதையாக நிற்கவேண்டுமா! அவள் கண்கள் கலங்கின!

"இல்லையம்மா! எந்த ஒரு நோக்கத்தோடு இங்கிலாந்தை விட்டு, இந்த இந்தியாவிற்கு வந்தோமோ, அது நிறைவேறி விட்டது. இந்த முகலாய ஆட்சியில் நான் தெருத்தெருவாகச் சென்று, இயேசுவைப்பற்றி போதித்தாகிவிட்டது! மறைமுக-மாக அனேகர் இயேசு மதத்தைத் தழுவிவிட்டனர்! மகளே! இனி நான் ஒருவிதக் குறைவுமின்றி கண்களை மூடிவிடலாம்! விதை விதைத்தாகிவிட்டது! என்றோ ஒருநாள் அது முளைத்துப் பெருகத்தானே செய்யும்! அம்மா! கர்த்தர் அதற்கு அருள் புரிவார்! ஆனால்... ஆனால்!"

"ஆனால்... என்ன அப்பா ?"

"உன் நிலையை நினைக்கும்போது என் நெஞ்சு வெடித்து விடும்போல் இருக்கிறதே !" துக்கம் தாங்காமல் அழுதார் ! அந்த ஆங்கிலத் துறவி ! மர்கேஷியஸ் ! ஜென்னி ! அவர் வளர்ப்புப் பெண்தான் ! ஆனாலும் அவள் அவருடைய உயி-ரினும் மேலானவள் ! துறவி அழுதார்! மகளும் அழுதாள் !

"குழந்தாய்! தைரியமாக இரு. நான் இறந்துவிட்டாலும் கூட, நீ முயற்சியைக் கைவிடாமல், பெண்கள் மத்தியில் சென்று என் வேலையைத் தொடர்ந்து செய். இதோ ! இந்த வேதச் சுருள் ! பத்திரமாக வைத்துக்கொள். இது ஆபத்து நேரத்தில் அறிவையூட்டும் ! சோர்ந்த மனதிற்கு புத்துயிர் கொடுக்கும் ! இந்த முகலாய ஆட்சியில் மத சுதந்திரம் இருக்கும் வரை உனக்கு அபாயமில்லை ! ஆனால் எதிர்ப்பு ஏற்படும்போது அஞ்சாதே ! உண்ண உணவின்றி, இருக்க இடமின்றி அலைய நேரிட்டாலும், உன் கடைசி மூச்சு ஒடுங்கும்வரை, அந்த இயேசுவுக்காகப் போராடு ! இந்தியா முழுவதும் எப்படியும் நம்மைப்போன்றவர் பட்ட பாடுகளுக்கு பலன் உண்டு !"

4

"தட...தட...தட...தட்...தடார்" யாரோ கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வரும் ஓசை கேட்டது ! ஆமாம் ! போர் வீரன் ஒருவன் உள்ளே நுழைந்தான் ! அவன் முக மூடியும் அணிந்திருந்தான் ! "வீரனே நீயார் ? இந்த நடுநிசியில் இத்துறவியின் குடிசைக்கு வரக் காரணம் ?" கேட்டார் அத் துறவி.

"ஐயா ! பெரியவரே ! நீர் சொன்னபடி நான் ஒரு வீரன் தான் ! நீர் கதவைத் திறப்பதற்கு முன் நான் நுழைந்து விட்டேன் அல்லவா !! அது இருக்கட்டும் ! இந்த வேளையிலும் கூட, நீ விழித்திருந்து என்ன திட்டம் போடுகிறாய் ? இந்த முகலாய இராஜ்ஜியத்தில் உன்னைப் போன்றவர்கள் அடிவைத்த நாளிலிருந்து, எத்தனை குடும்பங்களைப் பாழாக்கி விட்டீர்கள் ! எத்தனைபேர்கள் இரகசியமாக கூட்டம்கூடி இயேசுவைப் பிரார்த்திக்கிறார்கள் ! நானும் எத்தனையோ கிராமங்களைச்

சுற்றிப்பார்த்துக் கொண்டு வருகிறேன்! வியாபாரத்திற்காக வந்த நீங்கள், மதத்தையுமல்லவா பரப்பிக் கொண்டிருக்கிறீர்கள்! பழிகாரர்கள்! எத்தனை துணிவு உங்களுக்கு!

" வீரனே! நிறுத்து உன்பேச்சை! இது சக்ரவர்த்தி ஷாஜஹானின் ஆட்சியாகும்! அவர் ஆட்சியில் மதச்சுதந்திரம் உண்டு! இதைப்பற்றிக் கேட்பதற்கு நீ யார்? யார்? உனக்கேது உரிமை?

" ஹஹ்ஹஹ்ஹா " பேய்ச் சிரிப்பொன்றை எழுப்பினான் அவ்வீரன். " நீ யார் " — என்று கேட்கிறீர்! இந்நாட்டு மன்னன் ஷாஜஹானைப் போல நான் ஒரு கோழை அல்லன்! அவனுக்கு வீரமிருந்தால் இந்துக்களைத் தழைத்தோங்க விடுவானா? அந்நியநாட்டு மக்களாகிய உங்களுக்கு மதச்சுதந் திரம் கொடுப்பானா? எங்கள் நாட்டில் மதத்தைப் பரப்ப உங்களுக்கு என்ன உரிமை உண்டென்று கேட்கிறேன்? துறவியே! ஜாக்கிறதை! ஆமாம்! நினைவிலிருக்கட்டும்! உன் ஷாஜஹானின் ஆட்சி நேற்றோடு முடிந்துவிட்டது! அவன் சிறையில் கம்பி எண்ணிக்கொண்டிருக்கிறான்!

" ஐயோ! கொடுமை! கொடுமை!"

" இன்னும் கேள்! அவனின் மூத்த மக்கள் இருவரும் அல்லாவிடம் போய் சேர்ந்துவிட்டார்கள்! ஆனால் அவனின் கடைசி மகனான ஔரங்கசீப் இருக்கிறானே! அவன் கோழை அல்லன்! அந்நிய மதங்களை எதிர்க்கும் சத்துரு! அவன் ஆட்சி இந்த இந்தியா முழுமையும் பரவி வெற்றிக்கொடி நாட்டும்! முகலாய மக்களுக்கே தவிர, மற்றவர்களுக்கு அவன் ஆட்சியில் இடம் ஏது?"

" ஐயோ! இதென்ன கொடுமை! இத்தனைக் காலமாக இப்படிப்பட்ட கொடிய செயல்களை கேட்டதும் இல்லை! பார்த்ததும் இல்லை! சொந்த சகோதரரைக் கொன்றவன் கொலைப்பாதகன்! பெற்ற தகப்பனைத் தவிக்கவிட்டவன் தன்னலப் பிரியன்!"

" ஏ! துறவி! என்ன சொன்னாய்! நோயின் பிடியில் கிடந்து தத்தளிக்கும் உன்னை என்ன செய்கிறேன் பார்!"

மறைவிடத்திலிருந்து ஓடிவந்தாள் ஜென்னி! அவனின் ஓங்கிய கை, தகப்பன்மேல் விழாதவாறு குறுக்காக நின்று கொண்டு அலறினாள்! “வீரனும்! வீரன்! மொஹலாய வீரன், ஒரு நோயாளியான கிழவனிடம் இத்தனை வீரம் பேசும் கொடியவனே! என் தந்தை உன்னை யாரென்று கேட்டதற்கு, இன்னும் பதிலளிக்கத் திராணியற்ற வீரனே! உன் வீரத்தை மெச்சினேன்! ஆஹா! இந்த வீரனுக்கு முகமூடி வேறு! அட! கோழையே! படுக்கையில் கிடக்கும் என் தகப்பனைக் கொல்ல உனக்கு வெட்கமாக இல்லை!”

எதிர்பாராத ஒரு பெண்ணின் பேச்சு அவனை மெய் சிலிர்க்கவைத்தது! அவன் கண்கள் ஒருகணம் அவளை ஊடுருவிப் பாய்ந்தன! அவள் செயலற்று நின்றாள்! பொன் னிறமான அவள் மேனியிலே, வெண்ணிறமான அவள் ஆடை அழகிற்கு அழகு செய்தாற்போல் விளங்கிற்று! மனத்திரையிலே, அவன் மனைவியும் மக்களும் தோன்றி மறைந்தனர்! தலை கவிழ்ந்தான் வீரன்!!

“துறவியே! இதோபார்!” முகமூடியைக் கழற்றி எறிந்தான் வீரன்! “ஆ யுவராஜ்! நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது!” வியந்தார் துறவி! “ஆம் நான் நேற்றுவரை யுவராஜ்தான்! மக்களும் அவ்விதமே என்னை அழைத்தனர். ஆனால், இன்றையதிலிருந்து நானே பட்டத்தரசன்! ஔரங்கசீப்! நாடுமுழுவதும் என் வீரரை, அந்நிய மதத்தினரை வெட்டி வீழ்த்தும்படி கட்டளை பிறப்பித்துவிட்டேன். உன்னை எச்சரிக்கவே! இங்கு வந்தேன்! ஆனால் உனக்கு ஒரு மகள் இருப்பதை இன்றுதான் அறிந்தேன். உங்களை இனி வெளியில் விடுவதும் அபாயம்! வாருங்கள் என்னுடன்! குதிரை ஒன்று இருக்கிறது! சகோதரி! வா! உ...ம்! என்ன தயக்கம்!

“யுவராஜ்! மன்னிக்கவேண்டும்! என்னால் எழுந்திருக்கவே முடியவில்லை. நான் எப்படி பிரயாணம் செய்ய முடியும்? ஜென்னி! என் வளர்ப்புப் பெண்! அவளை நீ காப்பாற்று! அவளை நீ காப்பாற்று! நீ கூறியதுபோல் அவள் உன் சகோதரி! ஐயோ! நெஞ்சு வலிக்கிறதே! அம்மா! ஜெ...ன்...னி!! எதிர்பாராத அதிர்ச்சியால் தாக்கப்பட்ட அவன்

உள்ளம் உடைந்தது! அவன் ஆவியும் பிரிந்தது! அப்பா! அப்பா! அலறினுள் அப்பேதை! மூர்ச்சையுற்று வீழ்ந்தாள்!

5

விழித்தெழுந்து பார்க்கையில் தான் ஒரு பாதாள சிறையில் அடைக்கப்பட்டிருப்பதை அறிந்தாள்! யுவராஜ்! ஆம்! அந்த பட்டத்தரசன் ஔரங்கசீப்! தன் தகப்பனிடம் தன்னைக் காப்பதாகக் கூறிவிட்டு, இந்த பாதாள சிறையில் அல்லவா அடைத்துவைத்திருக்கிருன்! அவளால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை. தகப்பன் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன! தனது சிறிய கந்தலான மூட்டையை அவிழ்த்து அந்த வேதச் சுருளை எடுத்து வாசித்தாள். அது வாசிக்க வாசிக்க, சுவையாக இருந்தது! காலடிச் சப்தம் கேட்டது! யாரோ, படிகளில் இறங்கி வருவதை அறிந்தாள். சட்டென்று சுருளை எடுத்து ஒளித்துவைத்தாள்!

ஆம்! அந்த யுவராஜன் வந்துகொண்டிருந்தான்! அவள் உட்கார்ந்த இடத்தை விட்டுக்கூட எழுந்திருக்கவில்லை. அத்தனை வெறுப்பு!

"ஜென்னி! உன் பிடிவாதத்தை விட்டுவிடு! நீ இந்த நாட்டிலிருக்கும்வரை என் சகோதரி அல்லவா! என் சகோதரி என் மதத்தைத் தவிர வேறு மதத்தைப் பின்பற்றலாமா! உனக்கு ஏன் இந்தப் பிடிவாதம்! உனக்குத் தனியான அரண்மனையும், வசதிகளும் செய்து தருகிறேன்! உ...ம். வேறு என்ன வேண்டும்! சொல்!"

"யுவராஜ்! என்னை மன்னித்துக்கொள்! மண்ணும் பொன்னும் எனக்குத் தேவையில்லை! என்னை வெளியே விட்டுவிடு!" காதுகளைப் பொத்திக்கொண்டு மறுபடியும் படிகளில் ஏறி மேலே போய்க்கொண்டிருந்தான்! அந்த ஏழையின் மன்ருட்டு அவன் செவியில் ஏறுமோ!

நடுநிசி! தூக்கமின்றி அங்குமிங்கும் அறையில் நடமாடினுன் அந்த யுவராஜ்! "இன்ருேடு மூன்று நாட்களாகின்றன, ஜென்னியைப் பாதாள சிறையிலடைத்து! பாவம்! ஒரு

அனுதைக்கு எத்தனை தீங்கு செய்கிறேன்! துறவியிடம் அவளைக் காப்பதாகக் கூறிவிட்டு அவளுக்கு உண்ண உணவுகூடக் கொடுக்காமல் வதைக்கிறேனே! அப்போதாவது அவள் மதத்தை மாற்றிக்கொள்ள ஒப்புக்கொள்ளமாட்டாளா! உயி-ரோடு இவளை மட்டும் வெளியில் விட்டுவிட்டால், மக்களில் அனேகர் என்னை எத்தனை அவதூறு பேசுவார்கள்! ஐயோ! பாவம்! என்ன செய்வது!" அவன் மனச்சாட்சி வாதித்தது! எப்படியாவது இன்று அவளுக்கு விடுதலை அளித்துவிட வேண்டுமென்று தீர்மானித்தான்! வெள்ளிக் கிண்ணத்தில் மதுவை ஊற்றினான்! சுவைத்து, ருசித்துக் குடித்தான்! சோர்வுற்ற நெஞ்சில் அனல் மூண்டது!

6

தன் சுரங்க வாசலை அடைந்தான்! "பானு" — ஆம் அதுதான் அவனுடைய சிறந்த நண்பன்! இரண்டே வயது நிரம்பிய புலிக்குட்டி! அதன் கழுத்தை ஓர் சங்கிலியால் பிணைத்து, துணைக்கு அழைத்துக்கொண்டுபோனான்! அதன் உறுமல் அப்பாதையெல்லாம் எதிரொலித்தது! ஐயோ! இப் பாதை எங்கு சென்று முடிவடைகிறது? ஆம்! அது ஜென்னி அடைக்கப்பட்ட பாதாள சிறையின் முடிவாய் இருந்தது! அந்த விலங்கின் பேரொலி கேட்டு விழித்தாள் அப்பேதை! அந்தோ! பரிதாபம்! அவளால் நிற்கக்கூட முடியவில்லை! நகர்ந்து, நகர்ந்து ஒரு மூலையில்போய் பெட்டியிலடைப்பட்ட பாம்பைப்போல் அடங்கினாள்!

ஒரு கையில் பானுவைப் பிடித்திருந்த சங்கிலியைப் பற்றிக்கொண்டு, மற்றொரு கையால் அச்சிறைக் கதவைத் திறந்தான்! அவள் வியப்பு எல்லைக்கெட்டாததாயிருந்தது!!

"என் அன்பு சகோதரி! ஜென்னி! இன்றுமுதல் உனக்கு விடுதலை! வா! நீ என் மனைவி மக்களோடு கொஞ்ச காலம் தங்கியிரு! பின் உன்னைத் துணையுடன் உன் நாட்டிற்கே அனுப்பிவிடுகிறேன்!"

"யுவராஜ்!! உண்மைதானா! உன்னை நான் நம்பலாமா?"

' இதில் என்ன சந்தேகம் ஜென்னி ! உ...ம்...வா !

தன் கந்தலான மூட்டையை எடுத்துக்கொண்டு விடு-பட்ட பறவையைப்போல் மெள்ள வெளியே வரலானுள் ! ஐயோ ! இதென்ன கொடுமை ! அவள் கால்கள் தள்ளாடின ! மூட்டை கீழே விழுந்தது ! இத்தனை நாட்களாக ஒளித்து வைத்திருந்த அந்தப் புனித வேதச்சுருள் அவன் கண்ணில்பட்டு, உருண்டோடியது ! அவன் தாவிச்சென்று சட்டென்று எடுத்துப் பிரித்துப் பார்த்தான் ஐயோ ! அது அவனுக்குப் புரியாத பாஷையாக இருந்தது !

" ஜென்னி ! இதென்ன ?" வீர கர்ஜனை செய்தான் ! நடுங்கினுள் அப்பேதை ! வார்த்தைகள் வாயைவிட்டு வெளியே வர மறுத்தன ! தொண்டை விக்கியது !

" உ.. ம் ! சொல் ..சீக்கிரம் !"

" அது ! என்... வே த . ம் !" தகப்பன் எச்சரித்த வார்த்தைகளை எண்ணிப்பார்த்தாள் ! அவை அவள் நெஞ்சை ஊக்குவித்தன ! " ஆம் ! அது என் தகப்பன் கொடுத்த வேதச் சுருள் " மறுபடியும் அழுத்தமாகக் கூறினுள் !!

கோபக்கனலாய்ப் பொங்கி எழுந்தான் ! அச்சுருளை விட்டெறிந்தான் ! அது அந்த வாசலருகே விழுந்து உருண்டது ! அவனையுமறியாமல் அவன் கையினின்று 'பாணு'வைப் பிணைத்திருந்த சங்கிலி நழுவிற்று ! அப்பேதை மெல்ல நகர்ந்துசென்று அந்தச் சுருளை எடுக்கக் குனிந்தாள் ! ஐயோ ! பரிதாபம் ! பரிதாபம் ! ஊனையே உணவாகக்கொண்ட அந்த விலங்கினம், அவள் யாரென்பதை உணராமல் 'லபக்'கென்று ஒரே பிடியாக அவள் கழுத்தைக் கௌவிக்கொண்டது ! துடியாய்த் துடித்தாள் ! " யுவராஜ் ! நீ துரோகி ! து...ரோ...கி !! அதுவே அவள் கூறிய கடைசி வார்த்தை ! அவள் இரத்த வெள்ளத்தில் பிரேண்டு மிதந்தாள் ! " ஐயோ ! ஜென்னி !" அலறிக்கொண்டு ஓடிவந்தான் அந்த யுவராஜன் ! சங்கிலி தன் கையை விட்டு நழுவியதை அப்போதுதான் உணர்ந்தான் ! ஆனுல் அவள் அறியமாட்டாளே ! ' ஐயோ ! ஒரு அனுதை சகோதரிக்கு எத்தனை தீங்கிழைத்துவிட்டேன் !" அலறினுன் ! பித்தனைப்போல் புலம்பி

அழுதான்! அழுதுகொண்டே தான் வந்த பாதை வழியாகத் திரும்பினான்!

7

ஔரங்கசீப்பின் மனம் ஆடம்பரத்தை வெறுத்தது! அந்த ஏழை ஜென்னியின் நினைவு அவனை வாட்டி வதைத்தது! அவன் முன்னிலையில் அவள் துடித்து மாண்ட காட்சி அவனை அணு அணுவாகக் கொன்றது! இதை எப்படி மறக்க இயலும்! கைகளும், மனமும் ஏதாவது வேலையைச் செய்து, அதில் ஈடுபட்டாலன்றி அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும்போல் தோன்றியது! ஆம்! அவன் கைகள் அழகிய குல்லாக்களைத் தைத்தன ஓய்ந்த நேரத்தில் அவன் மனம் குர்ரானையே ஆராய்ந்தது! அவன் அரசனாயிற்றே! ஆம்! அது பெயரளவில்! அவன் காலமும் உருண்டோடியது!!

8

அடடா! கதை நீண்டுவிட்டதே! பையனின் கேள்விக்கு என் விடை சரியா? நீங்களே யோசித்துக் கூறுங்கள்.

போன் { கடை 197 / ஷாப் 107 / வீடு 107-A }

தலைமை ஆபீஸ்:
சேஷாத்திரி & பிரதர்ஸ்,
கடலூர் O. T.

பரசுராம் ஆட்டோ ஸ்டோர்ஸ்,

24, ப்யூக்ஸ் ரோட்,

புதுப்பாளையம் :: கடலூர் N T.

✻

எங்களிடம் எல்லாவிதமான கார், லாரி, பஸ்களுக்கு வேண்டிய சாமான்களும், எலெக்டிரிக் பல்பு, வயர், சுவிட்சு முதலிய சாமான்கள் சகாயமான விலையில் கிடைக்கும்.

தமிழ் நாட்டின் தவப்புதல்வர்!

சு. செல்வமணி,
10-ஆம் படி.

எளிய தூய நான்கு முழக்கதர் வேட்டி. அரைக்கைச் சட்டை, மேலே ஒரு துண்டு ஆகியவற்றுடன் கருத்த மேனியராய், நெடிதுயர்ந்த தோற்றத்தினராய் "ஆகட்டும் பார்க்கலாம்!" என்ற வார்த்தைகளை மட்டுமே பேசிக்கொண்டு, ஏழைகளை ஏழைமக்களை கடவுளாகவும், அவர்கள் வாழ்வை உய்விக்கும் பணியையே தெய்வத்தின் திருத் தொண்டாகவும் கொண்டு தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் சென்று மக்கள் குறைகளை நேரிற் கண்டு அவைகளைக் களைய வழி வகை செய்யும் தமிழ்நாட்டின் தவப்புதல்வர் திரு. காமராஜ்!

1903-ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் 15-ஆம் நாள் இன்று விருதுநகர் என்று வழங்கப்படும் விருதுப்பட்டியில் குமாரசாமி நாடார் - சிவகாமி அம்மாள் தம்பதிகளின் மகனாகபிறந்தார் திரு. காமராஜ் அவருக்கு ஒரு சகோதரியார் மட்டுமே உண்டு. தேங்காய் வியாபாரம் செய்து வந்த திரு. குமாரசாமி நாடார் காமராசரின் ஆறுவது வயதில் காலமானார் படிப்பு அதிகம் தேவைப்படாத அந்தக்காலத்தில் வியாபாரம் சிறந்து வியாபாரிகள் நிறைந்திருந்த விருதுநகரில் வாழ்ந்த காமராசருக்கு எழுதப் படிக்க மட்டுமே கல்விகற்பிக்கப்பட்டது.

விருது நகரில் துணிக்கடை வைத்திருந்த திரு. காமராசரின் மாமா கடையில் வியாபாரம் பயில்வதற்காக அமர்த்தப்பட்டார். அப்போது கடையில் இருக்கும் செய்தித்தாட்களைப் படித்து வந்த காமாராசருக்கு "ஹோம் ரூல்" இயக்கக் கிளர்ச்சி பற்றி வெளிவந்த செய்திகளைக் கண்டு தாமும் அம்மாதிரி கிளர்ச்சிகளில் ஈடுபடவேண்டு மென்ற ஆர்வம் ஏற்பட்டது.

பொது வாழ்க்கையில் ஈடுபடுவதென்றாலே - அரசினர்க்கு விரோதமான காரியம் என்ற மனோபாவம் நிலவியிருந்த காலமாதலால். அவருக்கு ஒரு திருமணம் செய்து வைத்து அவருக்குப் பொது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள ஆர்வத்தை

குலேக்கத்தீர்மானித்தார்கள் அவர் குடும்பத்தினர். ஆனால் இயற்கையிலேயே பெண்களை வெறுக்கும் சுபாவமுடைய காமராஜ் மணமானபின் குடும்பக் கவலை நம்மைப்பற்றிக் கொள்ளும், பொதுத் தொண்டில் ஈடுபடமுடியாது என்றெண்ணித் திருமணத்தை மறுத்து மறுமுறையும் திருமணப் பேச்சை யெடுத்தால் எங்காவது ஓடிவிடுவதாகப் பயமுறுத்தினர் எனவே திருமண ஏற்பாடு கைவிடப்பட்டது.

பின் திருவனந்தபுரத்தில் மரவியாபாரம் செய்து வந்த அவருடைய மாமாவின் கடைக்கு அவரை அனுப்பினார்கள். ஆனால் வியாபாரத்தில் ஈடுபட மறுத்த அவருடைய மனம் அப்போது மலையாளத்தைச் சேர்ந்த வைக்கம் என்ற ஊரில் நடந்த சத்தியாகிரகத்தை நாடியது அப்போது காங்கிரசில் இருந்து சிறந்து பணியாற்றிய பெரியார் ஈ வே. இராமசாமி போன்றோர் கலந்து கொண்ட வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்டார். அதன் பின் கன்னியா குமரியை அடுத்த சுசீந்தரத்தில் நடைபெற்ற அறப்போரில் கலந்து கொண்டார் இவ்வாறு பொதுத் தொண்டில் அவர் மனம் ஈடுபடுவதை அறிந்த அவரது குடும்பத்தினரும் அவரைக் கட்டுப் படுத்து வதைக் கை விட்டனர்.

பின்னர் முழுமூச்சாகப் பொது வாழ்வில் ஈடுபட்ட காமராசர் காங்கிரசில் சேர்ந்து சேவை செய்தார் இதன் காரணமாக விருதுநகரின் பணக்காரர்களின் எதிர்ப்பை அடைந்தார். அரசியலில் ஈடுபட்ட அவர் சென்னைமாநகர் மன்ற மேயராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணிபுரிந்து காலஞ்சென்ற திரு. சத்தியமூர்த்தியைத் தம் அரசியல் ஆசானாகப்பெற்று பணியாற்றி வந்தார்

ஒத்துழையாமை இயக்கம், நாகபுரி கொடிபோராட்டம். ஜெனரல் நீல் சிலை அகற்றும் போராட்டம் ஆகியவைகளில் ஈடுபட்ட திரு காமராசர் 1930-ல் நடந்த உப்பு சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்-பட்டார் காமராசர் சிறைப் படுத்தபட்டார் என்ற செய்தி யறிந்ததும் அவரை வளர்த்து ஆளாக்கிய அவரது பாட்டியா-ரான திருமதி பார்வதியம்மாள் மூர்ச்சையடைந்து 1931-ல்

காமராசர் விடுதலை யடைந்த சிலநாட்களுக்கு பின் நினைவு பெருமலேயே இறந்து விட்டார்.

1937-ல் சென்னை சட்டமன்றத்திற்கு நடை பெற்ற தேர்தலில் காமராசரை முழு மூச்சாக எதிர்த்த விருது நகரில், பின்னர் அவரை எதிர்த்து போட்டியிட எவருமே முன் வராததால் போட்டியின்றி எம். எல். ஏ. (M. L. A.) வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்,

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும், செயலாள ராகவும் பலமுறை தேர்ந் தெடுக்கப்பட்ட காமராசர் 1941-ல் சிறையிலிருக்கும்போது விருதுநகர் முனிசிபல் சேர்மனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1942-ல் விடுதலைப்பெற்றபின் ஒரு நாள் மட்டும் அப்பதவியை வகித்துவிட்டுப் பின் ராஜினாமா செய்து விட்டார்.

1954-ஆம் ஆண்டில் பிப்பிரவரி, மார்ச்சு மாதங்களில் மலேயாவில் சுற்றுப் பயணம் செய்து திரும்பிய காமராசர் தமிழ் நாட்டின் முதலமைச்சராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்நாட்டின் வளத்திற்காகவும் தமிழ் மக்களின் வாழ்வுக்காகவும் ஓயாது பாடுபட்டு வருகிருர்- தமிழ் நாட்டின் இரட்சகர் காமராசர்.

குலை நடுக்க மெடுக்கும் குளிர் மிகுந்த வட இந்தியா பகுதிகளில் இங்கிருப்பதைப் போலவே நான்கு முழ வேட்டி. சட்டையுடன் இருந்து குளிரைத் தாங்கும் மனத்திடம் பெற்ற இவர் எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் திறம் பெற்றவர் அவர் அதிகம் படித்தவரல்லர்! ஆனல் படித்தவர் மட்டுமே நாடாளமுடியும் என்ற சம்பிரதாயத்தை மாற்றியமைத்தவர் என்று அகில உலகம் புகழும் ஆசிய ஜோதி, இந்தியப்பிரதமர் ஜவகர்லால் நேருவால் புகழப் பெற்றவர் புகழ் பெற்ற பேச்சாளர் அல்லர்! ஆனல் பெரும் மக்கட் கூட்டத்தையும் தம் கருத்திற்கிழுக்கும் ஆற்றல் பெற்றவர். வாதம் புரியக் கற்றவரல்லர்! ஆனல் எவ்வித வாதத்திற்கும் பதில் கொடுக்-கக்கூடிய திறமைசாலி. ஹிட்லர், ஸ்டாலின் போன்ரேர் களைப்போல் மெத்தப் படிக்காமலேயே நாடாள்பவரெனினும்

ஹிட்லரைப் போல் வாய்ச்சாலக்காரரல்லர் ஸ்டாலினைப்போல் உள்ளக்கருத்துக்களை முகபாவம் மூலம் காட்டும் சுபாவமில்லாதவர்

ஸ்டாலின் ரஷ்யாவின் சர்வாதிகாரியானபின் தன் தாயை மூன்று தடவைகள் மட்டுமே சந்தித்ததாக சொல்வார்கள். அதுபோல காமராசரும் தன் தாயாரைப் பார்ப்பதரிது. எவ்வளவோ அனுபவிக்கக் கூடிய வசதிகளிருந்தும் எதையுமே நாடாது பற்றற்ற வாழ்வு நடத்திவரும் தியாகி திரு காமராசர்.

அவரை முதலமைச்சராகப் பெற்றதன் மூலம் பெரும் பயன் அடைந்துள்ள இந்த தமிழக மக்கள் தம் நன்றியைத் தெரிவிக்கும் முறையில் அவரது உருவத்தை வெண்கலத்தில் வார்த்தெடுத்துச் சிங்காரச் சென்னையில் சிலையமைத்து பெருமைப் படுத்தி விட்டனர்.

வாழ்க காமராசர்!

போன் 15 Tel. "YESKEBROS"

தூய தாவீது உயர்நிலைப் பள்ளிக்கு
(Formerly S. P. G. High School)
எதிரே உள்ள

மரவாடியில்

கட்டிட வேலைகளுக்குத் தேவையான
மரம், சயிஸ்கள், பலகைகள், பட்டைகள், ஓடுகள் முதலிய
சரக்குகள் குறைந்த விலையில் கிடைக்கும்.

*

எஸ். கே. பிரதர்ஸ்,

மர வியாபாரம்,

வில்லிங்டன் வீதி :: கடலூர் O. T.

தாவர வளர்ச்சியை பாதிக்கும் காரணங்கள்

(Factors affecting plant growth)

C. R. RANGASWAMY, M. A., M. SC.,

ஒரு செடியின் வளர்ச்சி நமக்கு ஒரு சாதாரண நிகழ்ச்சி-யாய்த் தோன்றினாலும், அதில் அடங்கியுள்ள உண்மைகளை ஆராயுங்கால், அந்த வளர்ச்சிப்போக்கில் அடங்கியுள்ள பல சிக்கல்கள் நன்கு புலப்படும். ஒரு செடியின் ஒழுங்கான வளர்ச்சியை முக்கியமாக கீழ்க்கண்ட காரணங்கள் பாதிக்கின்றன. அவை;—

1. மண்ணியல்பு (Eduphic factor)
2. தட்ப வெப்பநிலை or விண்ணியல்பு (Climatic foctor)

இவை இரண்டில் தட்பவெப்ப நிலையே முக்கியமானது. உதாரணமாக நமது வெப்பமிக்க இடங்களில் வளரும் ஒரு முருங்கை மரத்தை மணற்பாங்கான நிலத்திலோ, அல்லது களிப்பான பூமியிலோ வளர்த்துவிடலாம். ஆனால் முருங்கை, உதக மண்டலம் போன்ற குளிர் பிரதேசத்தில் வளர்க்கமுடியாது. அதேபோல் உதகையில் வளரும் தைல மரத்தை (Eucalyptus tree) நமது உஷ்ணப் பிராந்தியத்தில் வளர்ப்பது கடினம். இதிலிருந்து தட்பவெப்பத்தின் மேன்மை புலப்படும்.

I. மண்ணியல்பு (Eduphic factor).

மண்ணியல்பில் அடங்கியுள்ளவை மண் (Soil), சத்துப் பொருள் (Nutrients), மண்வாழ் உயிரினங்கள் (Soil Mino organisms), ஆகியவை ஆகும்.

மண் ஒரு செடிக்கு ஆதாரத்தைக் கொடுக்கிறது. மண்-ணுடன் கலந்துள்ள சத்துப் பொருள்கள் செடியின் வளர்ச்சிக்கு வேண்டிய உணவைக் கொடுக்கிறது மண்வாழ் உயிரினங்கள் சில செடிக்கு வளர்ச்சியை கொடுப்பனவாகவும், சில கெடுப்பன வாகவும் அமைந்துள்ளன.

மண் இல்லாமலேயே ஒரு செடியை சத்துக்கள் அடங்கிய தண்ணீரில் வளர்க்க முடியும். இதை ஹைட்ரோ போனிஸ் (Hydroponigs) என்று சொல்லுவார்கள். சூரியகாந்தி, தக்காளி, கீரை வகை மற்றும் பல செடியினங்களை அவ்வாறு இல்லாமல் நீரிலேயே வளர்க்கலாம். ஒரு தொட்டியில் ஒரு வாளி நீர் விடவும். அதில் இரண்டு தேக்கரண்டி அமோனியாவும், ஒரு தேக்கரண்டி சூப்பரும் * சேர்த்து கலக்கிய பிறகு அத்தொட்டியில் ஒரு பசலைத் தண்டை அடிமுனை நீரிலும் மேல்முனை நீருக்கு மேல் இருக்குமாறு போட்டால் அது நன்ருக வளர ஆரம்பித்துவிடும் சூரிய காந்தி, தக்காளி போன்ற செடிகளை வளர்ப்பதானல் தொட்டியின் தண்ணீர் மட்டத்தில் ஒரு கம்பி வலையைப் பொருத்தி அதன் மேல் சிறிது வைக்கோலைப் போட்டு, பிறகு நனைந்த வைக்கோல் மேல் விதைகளைத் தூவ வேண்டும். செடிகள் இதில் ஒழுங்காகத் தரையில் வளர்வதுபோல் வளர்ந்து மலர்விட்டு பிறகு மடியும்.



படம். 1.
1. செடி
2. வைக்கோல்
3. கம்பிவலை
4. நீர்க்கலவை

II. தட்பவெப்ப நிலை (Climatic factor)

இதில் நீர், காற்று, ஒளி, ஒலி ஆகியவை அடங்கியுள்ளன. நீர் ஒரு செடியின் வளர்ச்சியையே பாதிக்கக் கூடியது. சரியான அளவு நீர் இல்லாவிடில் செடிகள் குட்டையாகவும், கட்டையாகவும் இருக்கும். செடியின்வேர் பூமியில் நீர்மட்டம் வரையிலும் வளரும். கடற்கரையோரம் மணல்மேட்டில்

---

* Original formula being:—

Magnesium sulphate	0·5 gms.	All should be dissolved in 1 gallon of water.
Double Super phosphate	0·5 gms.	
Potasium Nitrate	4·0 gms.	
Ammonium Sulphate	3·0 gms.	

வளரும் செடிகளை நாம் தோண்டி எடுத்தால் சில வேர்கள் 7 அடி ஆழத்திற்குமேல் அதாவது நீர்மட்டம் வரையில் சென்றிருப்பதைக் காணலாம். அதே செடி மேட்டில் அல்லாமல் தரை மட்டத்தில் வளர்ந்திருந்தால் அவைகளுடைய வேர் ½ அடி ஆழம்தான் சென்றிருக்கும்.

காற்று செடிகள் உயிர் வாழ்வதற்கு அவசியம் என்பதை எல்லோரும் அறிவோம். ஆனால் காற்றின் போக்கு ஒரு செடியின் தோற்றத்தையே மாற்றும் என்பது நமது கடற்கரை ஓரம் வளரும் சில மரங்களைக் கவனித்தால் தெரியும். அம் மரங்களுடைய கிளைகள் ஒரு பக்கமாகவே அதாவது கரையை நோக்கியே – வளர்ந்திருக்கும் பலமாக கரையை நோக்கி அடிக்கும் காற்றினாலேயே இந்த வளர்ச்சி மாறுதல். கடற்கரையோரம் வளரும் சில செடிகள் தரை மட்டமாகவே வளர்ந்து காற்றின் கொடுமையிலிருந்து தப்பிவிடுகின்றன.

ஒளியின் (Light) முக்கியத்வம்பற்றி யாவரும் அறிவோம் ஆனால் ஒலி (Sound) ஒரு செடியின் வளர்ச்சியைப் பாதிக்க வல்லது என்பதை சமீப காலமாகத்தான் நிரூபணம் செய்து வருகிகிறார்கள்

ஒலி (Sound) சங்கீத ரூபத்திலோ அல்லது ஒரு குறிப்பிட்ட அலை அடுக்கு வரிசையிலோ செடியின் வளர்ச்சியை பாதிக்கவல்லது என்பதை அண்ணாமலைப் பல்கலைக் கழக தாவர இயல் பேராசிரியர் டாக்டர் சிங் என்பவர் கண்டுபிடித்துள்ளார். இதற்கு முன்னாலேயே செர்மானிய தேசத்து விஞ்ஞானிகளும். நமது நாட்டு சர் J. C. போசும் இதுபற்றி சோதனைகள் செய்து வெற்றிபெற இயலாமல் இந்த ஒலிப்பிரச்சனையை கைவிட்டார்கள். கண்ணன் குழலோசையில் செடிகளும் ஆவினங்களும் மயக்கம் கொண்டதாக நாம் அறிகிறோம் நமது பழங்காப்பியங்களிலும் இது பற்றி பல இடங்களில் பேசப்படுகிறது. ஆனால் இவைகளெல்லாம் ஒலித்வத்தைபற்றிய கற்பனைகளும், வெற்றிபெறாத முயற்சிகளுமேயாகும். ஒலியானது செடிகளின் வளர்ச்சியை பாதிக்கவல்லது என்பதை முதன் முதலாக நிரூபித்த பெருமை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை சார்ந்த பேராசிரியர் சிங்குக்கு உரித்தாகும் அவர்

தமது சித்தாந்தத்தை பல பரிசோதனைகளால் நிரூபித்தார். அவற்-றில் மிகவும் சுலபமானது ஆனால் மிகவும் வியக்கத்தக்கது — நீர்ப்பாசி ஒளிச்செயற்கை பரிசோதனையேயாகும்.

இதற்குவேண்டிய உபகரணங்கள் :

சம அளவு கண்ணாடி குடுவைகள்	2
கண்ணாடி funnels	2
நீண்ட பரிசோதனைக் குழல்கள்	2
மின் விளக்குகள்	2
மின்சாரமணி	1
சமவயது வேலம் பாசிச்செடிகள்	4

ஒவ்வொரு கண்ணாடிக் குடுவையிலும் இரண்டு வேலம் பாசிச் செடிகள் (Hydrilla) போடப்பட்டு அதன்மேல் (funnels) தலைகீழாக கவிழ்த்து மூடப்பட்டது. Funnel–ன் காம்பு மூழ்கும் வரை தண்ணீர் ஊற்றப்பட்டு, funnel–ன் காம்பின்மேல் தண்ணீரில் நிரப்பப்பட்ட நீண்ட பரிசோதனைக்குழல் தலைகீழாக செருகப்பட்டது. இப்படி செய்யபட்ட சோதனைக்கூட்டில் ஒன்று ஒரு அறையிலும், மற்றது சிறிது தூரத்தில் உள்ள மற்ற அறையிலும் வைக்கப்பட்டன. ஒவ்வொன்றிலும் ஒரு மின் விளக்கு அருகில் வைக்கப்பட்டது ஆனால் நிரூபண சோதனைக் (Experimental) கருகில் மேலே சொன்னவை தவிர அருகில்



படம் 2

1 கண்ணாடிகுடுவை
2 தண்ணீர்
3 புனல்
4 வேலம்பாசி
5 சோதனைக்குழாய்
6 மின் விளக்கு
7 மின் மணி
8 பிராணவாயு

ஒரு மின்சார மணியும் பொருத்தி இயக்கப்பட்டது. இந்த மின் மணியின் ஒலி அளவை (Control) சோதனை வைக்கப்பட்டுள்ள அறையை அடைய முடியாதவாறு இருக்கவேண்டும். ஆகவே ஒலியைத் தவிர நிருபண சோதனையிலுள்ள வேலம்பாசியும், அளவைச் சோதனையிலுள்ள வேலம்பாசியும் ஒரே அளவு சத்துப் பொருள் ஒரே அளவு ஒளி, ஒரே அளவு உஷ்ண நிலைகளைப் பெறுகின்றன. ஆகையால் இவை இரண்டும் ஒரே அளவு ஒளிச் செயற்கை செய்யவேண்டும். இந்தப் பரிசோதனையில் என்ன நிகழ்ந்தது என்பதை கவனிப்போம்.

ஒளிச் செயற்கையின்போது செடிகள் அதாவது இங்கு வேலம்பாசி கரியமலவாயுவை உட்கொண்டு, பிராணவாயுவை வெளியிடுகிறது இந்த பிராணவாயு மேலே நோக்கிச்சென்று நீண்ட பரிசோதனைக் குழலின் நுனியில் சேகரமாகிறது. பரிசோதனை முடிவில் (அதாவது பரிசோதனை ஆரம்பித்து 1 மணி நேரத்திற்கு பிறகு) நிருபண சோதனை வேலம்பாசியும் அளவை சோதனை வேலம்பாசியும் ஒரே அளவு ஒளிச்செயற்கை செய்திருக்குமேயானால் இரண்டிலும் ஒரே அளவு பிராணவாயு சேர்ந்திருக்கும். ஆனால் இங்கு அப்படி நிகழவில்லை.

நிருபண சோதனையில், அளவு சோதனையைவிட இரண்டு பங்கு அதிகமாக பிராணவாயு சேர்ந்திருந்தது. அதாவது மின்சார மணியின் ஒலி அலைகளால் தூண்டப்பட்ட வேலம்பாசி அதிகமாக ஒளிச் செயற்கை செய்தது. இந்தப் பரிசோதனையை பள்ளியில் உள்ள சோதனைச் சாலையில் சுலபமாகச் செய்து பார்க்கலாம்.

ஒலியினால் செடியின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என்ற உண்மையைப் பலரும் உணரத் தொடங்கியுள்ளார்கள்.

கொடைக்கானல்

S. YUVARAJAN, IX Std. 'B'

கொடைக்கானல் என்றதுமே நமக்கு ஒருவிதமான குளிர்ச்சி ஏற்படுகிறதல்லவா? ஆம்! இது ஒரு குளிர்ந்த பிரதேசம்தான்! சுமார் 7500 அடி உயரத்திலே இயற்கையாக அமைந்துள்ள அற்புத நகரம் இது. தென்னிந்தியாவிலேயே சிறந்து விளங்கும் கோடை வாசஸ்தலங்களில் முதன்மையான தொன்று.

கொடைக்கானல் என்று பெயர் வந்ததற்குப் பலர் பலவிதமாகக் காரணங்கள் கூறுகின்றனர். இது மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு கோடியில் இருப்பதால் இதற்கு "கோடிக்கானல்" என்றும் பின்பு அதுவே மருவி 'கொடைக் கானல்' என்றும் வந்தது என்று பலர் பலவிதமாகக்கூறுகின்றனர். ஆகவே பலர் பல பெயரிட்டு அந்தக் காலத்தில் அழைத்து வந்திருந்ததாலும் தற்சமயம் கொடைக்கானல் என்ற பெயரே நிலைத்துவிட்டது

இங்குள்ள சில இடங்களைப்பற்றி சிறிது பார்ப்போம்.

முதன் முதலில் நாம் கொடைக்கானலுக்குப் போகும் போது கொடைக்கானலுக்கு நான்கு மைல் தூரத்தில் காணப் படுவது "சில்வர் கேஸ்கட்" (வெள்ளி அருவி) என்ற நீர்வீழ்ச்சியாகும். இது 250 அடி உயரத்திலிருந்து பால்போல் பன்னீர் தெளித்து விழும் அருமையான நீர்வீழ்ச்சியாகும். அடுத்தது இந்நகரத்தில் உள்ள எழில்மிகு ஏரியாகும். நகரின் மத்தியிலே அழகாகவும், கண்கவரும் முறையில் இயற்கை யாகவே அமைந்திருக்கும் இந்த ஏரி 3 மைல் சுற்றளவு உடையதாகும். இதைச் சுற்றிலும் பாதை போடப்பட் டுள்ளதால் காரிலேயே இவ்வேரியைச் சுற்றிப்பார்க்கலாம். ஏரியில் இறங்கி சுற்றிவர பல ஓடங்கள் உள்ளன. தென்-னிந்தியாவிலேயே இம்மாதிரி ஏரியே இல்லையெனச் சொல்லலாம்.

இங்குள்ள வான ஆராய்ச்சி நிலையம் (OBSERVATORY) முக்கியமாகப் பார்க்கவேண்டிய இடம். இந்நிலையம் மத்திய சர்க்காரின் நிர்வாகத்தில் உள்ளது இது அமைந்திருக்கும் இடம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 7000 அடி உயரத்தில் இருக்கிறது இதை வெள்ளிக்கிழமைதோறும் பொதுமக்கள் சென்று காணலாம். இங்கு ஒரு இந்து கோவில் உள்ளது. இதன் பெயர் குறிஞ்சி ஆண்டவர் கோவிலாகும் இதைக் கட்டியவர் லேடி ராமநாதன் என்ற வெள்ளைக்கார மாது ஆகும். இந்தக் கோவிலிலிருந்து பழனி மலையையும் பழனி ஆண்டவர் கோவிலையும் காணலாம். இது நகரத்திலிருந்து சுமார் 3 மைல் தூரத்தில் உள்ளது.

கொடைக்கானலில் சண்பகனூர் என்ற ஊர் ஒன்று உள்ளது அங்கு ஆங்கிலப் பாதிரிமார்கள் கல்வி பயிலும் கலாசாலை ஒன்றும் பொருட்காட்சிச்சாலை (மியூசியம்) ஒன்றும் உள்ளன அங்குள்ள அஞ்சல் நிலையத்தைப்போல் நீங்கள் இந்தியாவில் எங்குமே காணமுடியாது சென்னை மாகாணத்தி-லேயே சுத்தமாக இருக்கும் அஞ்சல் நிலையம் என்று சர்க்காரால் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இங்கு இன்னும் அநேக சரித்திர சம்பந்தமான இடங்கள். சரித்திரச் சான்றுகள், அடையாளங்கள் அநேகம் இருக்கின்றன. இதன் சீதோஷ்ண நிலை சுகாதாரத்திற்கேற்றது. கொடைக்-கானல் ஒரு நகரம் இதனை நகராட்சிக் குழுவினர் கண்காணித்து ஆட்சி புரிகின்றனர். அதன் சார்பில் ஒரு பள்ளியும் உளது. இதை ஒவ்வொருவரும் சென்று காணவேண்டும்.

விடுகவிகள்

S. வெங்கிடேசன், *ஆறும் படிவம் 'ஈ' பிரிவு.*

கால்கள் உண்டு நடப்பதில்லை
கண்கள் உண்டு பார்ப்பதில்லை
இறக்கை உண்டு பறப்பதில்லை (நான் யார்)

—(நாற்காலி)

புகழுடையோர் யார்? கற்ருேரா? கல்லாதோரா?

வெ. இராஜவேல், *பள்ளி இறுதி வகுப்பு*

✽

உறுப்பினர் : முருகன், வள்ளி தெய்வயானை

இடம் : முருகனின் நிலாமுற்றம்

காலம் : இரவு 10 மணி

முருகன் : [மனைவியரைப் பார்த்து] என்னிரு கண்களே! என் உள்ளத்தில் ஒரு சந்தேகம் எழுந்துள்ளது. அதை உங்களிடம் சொல்லி நிவர்த்தி செய்துகொள்ள ஆசைப்படுகிறேன். அதாவது மாந்தருள் சிலர் கற்றவராயும், கல்லாதவராயும் இருந்து வருகின்றனர் இன்னும் சிலர் கற்றுப் புகழ் அடைகின்றனர் சிலர் கல்லாதிருந்தும் புகழ் அடைகின்றனர். இவருள் சிறப்பாக புகழுடையவர் யார்? கற்ருேரா ? கல்லாதோரா ?

தெய்வயானை : நாயகரே! படித்தவரே இவ்வுலகில் சிறந்தவராக கருதப்பட்டாலும் நான் படியாதோரே மிகச் சிறந்தவர் என்பதை உறுதியாகக் கூறுகிறேன். இவ்வுலகில் படித்தவர்கள் சிலரே. ஆனால், படிக்காதவரின் தொகைதான் அதிகம் இதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்க்குங்கால் அவர்களின் அறியாமை அல்ல என்பது நன்கு புலப்படும். ஒரு குடும்பத்தில் பெரும்பாலும் படித்தவர் ஒருவர் அல்லது இருவர்தான் இருக்கின்றனர். கிராமங்களில் பகுத்துப் பார்க்குங்கால் இதுகூட இருக்காது. ஏனெனில் ஒரு குடும்பத்தில் உள்ள எல்லோருமே கல்வி கற்கச் சென்றுவிடுவார்களேயானல் அவர்களுக்கு யார்தான் உண்டி கொடுப்பது? உடை அளிப்பது? எல்லோரும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள இக்காலத்திலேயே உணவு பற்றுக்குறை ஏற்பட்டு அடிக்கடி பஞ்சம் ஏற்படுகிறது. மக்கள் வாடுகின்றனர். உணவின்றி மடிகின்றனர்.

ஏதோ ஓர் அளவுதான் படிக்க முடியும் அதுவும், ஒரு குடும்பத்தில் ஒருவர் படிக்கும்வரை மற்றவர் சம்பாதிக்க வேண்டும்.

புகழ் பெறவேண்டும் என்று தன் வாழ்நாள் முழுவதுமே படித்துக்கொண்டே அவன் இருந்தால் அக் கல்வியினால் என்ன பயன்? சிறிது கற்றவுடன் தன் வாழ்க்கைக்கு வேண்டிய வழியை அவன் வகுத்துக் கொள்ளுவானேயானால் அவனே தன் உயிர்க்கு பாது-காவலாக அமைவான். கற்று ஒருவன் புகழ் அடைவதை விட இல்லறத்தில் இருந்து வறியோர்க்குத் தம்மால் ஆன உதவியைச் செய்து, விருந்தினரை உபசரித்து விண்-ணோர்க்கு நிகராக விளங்குதலே சிறப்புடையது என்பதாம் அல்லாமல் படித்துக்கொண்டே இருப்பானாயின் கடைசியில் அவன் உயிர்க்கு இறுதி நேர்ந்த காலத்து அவன் யாதுதான் செய்துகொள்ள முடியும்

ஒருவன் படித்துக்கொண்டே இருக்கலாம் அவ-னுக்கு அநேக வசதிகள் இருக்கும். ஆனால் எல்லோருக்கும் அவ்விதம் முடியாது. ஒருவன் நன்கு படித்திருந்தாலும் திருவள்ளுவர்

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

என்று கூறியவாறு உலகு அறிவைப் பெறாதவன் கற்றவ-னாகக் கருதப்படமாட்டான். கல்லாதவனுக்கு உலக நடையை அறிந்து ஒழுக வாய்ப்பு ஏற்பட்டாலும் ஏற்படும்; ஆனால் கற்றவனுக்கு அவ்வாய்ப்பு ஏற்படாது.

இக்காலத்தில் படித்தவன் என்று சொல்லப்-படுபவன் தன் படிப்பினால் தீய காரியங்களையும் செய்ய நேரிடும் அவன் படித்த பெருமையால் பெரியோரை மதியான். பெரியோர் சொற்படி கேளான், நாகரீக வாழ்வையே விரும்புவான் தன் வாசலை மதியான், சுற்றத்தாரை நினையான். தீய காரியத்தையே கண்டு இன்புறுவான். அச்செயலில் ஈடுபட்ட அவன் அச் செயலிலேயே உயிர்விடவும் நேரிடும். படித்தவர்கள்

சிலராய் இருப்பினும் அவருள் புகழடைவோர் ஒரு சிலரே. ஆனல் படிக்காதவர்கள் புகழ் அடைதல் வியக்கத்தக்க செயலாகும். ஒருவன் கற்று அதனுல் புகழ் அடைவதைக் காட்டிலும், கல்லாமல் புகழ் அடைதல் அதனினும் சிறந்ததன்ருே ?

கற்றவன், கல்லாதோன் இவருள் கல்லாதவனே சிறந்தவனுகின்ருன் கற்றவனைப்போல் கல்லாதவன் நற்காரியங்களைச் செய்து புகழைத் தேடிக்கொள்ளா-விடினும் தீய காரியங்களைச் செய்து இழிவைத் தேடிக் கொள்ளமாட்டான் கல்லாதவன் தான் கற்கவில்லையே என்று பிற்காலத்தில் துன்பம் அடையவும் கூடும். ஆனல் அத்துன்பம் அவனுக்குப் பெரிதாகத் தோன்ருது. ஆனல் படித்தவன் தான் படித்து தேர்ச்சி பெருவிட்டால், புகழ் அடையாவிட்டால்தான் பெரிதும் துன்பமடைவான். தான் இருந்து என்ன பயன் என்று கருதுவான். சிலர் தற்கொலை செய்துகொள்ளவும் கூடும் ஆனல் படியாதவன் அப்படி இல்லை.

இம்மட்டோ ! கற்றவன், தான் செல்வம் பெற்-றிருந்த காலத்து தான் மேற்கொண்டிருந்த பழக்க வழக்கங்களை விட்டொழிக்க முடியாமையால் தான் பெரிதும் துன்பமடைவான் ஆடம்பர வாழ்க்கைக்கு செல்வம் இல்லையே என்று பெரிதும் துன்பமடைவான். ஆனல் கல்லாதவனே இத்துன்பம் அடையமாட்டான். எனவே கற்றவனைவிட கல்லாதவனே புகழுடையோன் என்பது என் சித்தாந்தம்.

வள்ளி : கணவ ! தெய்வயானை கூறிய கருத்து அனைத்தும் நீதிக்கு நேர்மையானது அன்று என்பதை நான் முக்காலும் கூறுவேன் இவள் கூறிய அனைத்தும் நீதி நூல்களுக்கு எதிர்மாருக உள்ளதாகும். கற்றவனே புகழுடையோனுவான் என்று புலவர் பலர் எடுத்துக்காட்டியுள்ளதை தெய்வயானை மறந்தனள் போலும்

சிறுபஞ்சமூல ஆசிரியர் காரியாசான் தம் நூலில் ஒரு வெண்பாவில் கூறியுள்ள "தேவரே கற்றவர் கல்லாதார்

தேருங்கால் பூதரே ” என்னும் அடியை நோக்குங்கால் கற்றவரே தேவர் என்றும் கல்லாதவர் பூதத்திற்கு சமான மானவர் என்றும் நன்கு புலப்படும்.

தெள்ளுதமிழ் ஓதும் தெய்வப் புலவரும் கல்வியின் சிறப்பையும், பயனையும் தம் நூலில் தெளிவுபடக் கூறியுள்ளார். அவர் கல்வி என்னும் அதிகாரத்தில் அளித்துள்ள :

“ கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் ”

என்னும் குறளை நோக்குங்கால் கற்றவரே கண்களை உடையவர் என்றும் கல்லாதவர்கள் முகத்தில் இரண்டு புண்களை உடையவர் என்றும் நன்கு புலப்படும். ஒருவன் கல்வியினால் தான் சிறந்த நற்பலனையும் புகழையும் அடைகின்றான் கற்றவரே தன் கல்வி அறிவினால் எக்காலத்தும், எவ்விடத்தும் உள்ளவற்றைக் காணும் ஞானக் கண்ணுடையவர். மற்றும் ஒருவன் இறக்குமளவும் கல்வியைக் கற்றல் வேண்டும். கற்றவனுக்கு தன் நாடும் தன் ஊருமேயல்லாமல், யாதானும் ஒரு நாடும் தன்னுடைய நாடாகும். எந்த ஊராயினும் தன்னுடைய ஊராகும். இதேக் கருத்தைத்தான் வள்ளுவர்

“ யாதானும் நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு ”

என்று அடித்துக் கேட்பதுபோல் கூறியுள்ளார் அறிவை ஒருவன் பெற்றிருந்தால்தானே அவன் புகழை அடைய முடியும்.

“ தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு ”

என்பதை தெய்வயானை மறந்தனள்போலும். எல்லாச் செல்வங்களுள் தலைசிறந்த செல்வம் கல்விச் செல்வம் என்பதை வள்ளுவர் வாயிலாக நாம் நன்குணரலாகும்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்ற யவை"

என்று கூறிய வள்ளுவரின் வாய்மையை நோக்குங்கால் ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியாகும். ஏனை மணி, பொன் முதலான செல்வங்கள் அல்ல என்பது நன்கு விளங்கும். மேலும் கல்லாதவர் எங்ஙனம் இழித்துப் பேசப்படுகிறார் என்பதை பொய்யில் புலவரின் பொய்யா மொழியை ஆராய்ந்தால் உண்மை நன்கு புலப்படுவதாகும். எடுத்துக்காட்டாக,

"விலங்கொடு மக்களனையர் இலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர்"

என்ற குறட்பாவை ஆராயுமிடத்து விளங்கிய நூல்களைக் கற்றவரோடு கல்லாதவரை ஒப்பிட்டுப் பார்க்குங்கால் மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாட்டை ஒத்தவர் என்பது தெள்ளத் தெளியுமன்றோ.

நான்மணிக் கடிகை ஆசிரியர்கூட தம் வெண்பாவில் "கல்வி அறிவைப் பெறாத உடம்பைப் பெற்றிருத்தல் அவனுக்கு அழிவை உண்டாக்கும்" என்னும் பொருள்பட "தனக்குப் பாழ் கற்றறிவில்லா உடம்பு" என்று மொழிந்துவைத்துள்ளார். எனவே கற்றவனே மிகமிகச் சிறப்புடையவனாவான்.

கல்விச் செல்வம் பகைவனால் அழிக்கமுடியாதது, பங்காளிகளால் பங்குபெற முடியாதது, கள்வரால் பறித்துச் செல்ல முடியாதது, வெள்ளத்தால் அழிவுறாதது, தீயினால் பாழாகாதது, மன்னர் வெகுண்டாலும் அழிக்க முடியாதது, கொடுக்கக் கொடுக்கக் குறைபடாதது. எனவே இக்கல்விச் செல்வத்தைப் பெற்று அதனால் புகழ் அடைபவனே சிறந்தவனாகின்றான். இக்கருத்தை ஒத்த வெண்பா ஒன்று நாலடியாரில் காணப்படுகிறது. அதாவது :

" வைப்புழிக் கோட்படா, வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சை மற்றல்ல பிற "

என்பதாகும்

இதே நாலடியாரில் மற்றொரு இடத்தில் பண்புடையார்களிடம் பொருந்தாதவைகளாக கூறவந்த சமண முனிவரும் கல்வியின் அவசியத்தை உணர்ந்தே "கல்லாது போகிய நாளும் பெரியவர்கட் செல்லாது வைகிய வைகலும்...... படாஅவாம் பண்புடையார் கண் " என்று தம் வெண்பாவில் கூறியுள்ளார். எனவே செல்வத்துள் செல்வம் கல்விச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை என்பதாகின்றது. இங்ஙனம் பல இலக்கியங்களை ஆராய்ந்து பார்க்குங்கால் கல்விச் செல்வத்தை பெற்று அதனால் பெருமை அடைபவரே கல்லாதவரைவிட மிகச் சிறந்த புகழுடையோராவர் எனவே கற்றோரே புகழுடையோராவர் என்பது எனது சித்தாந்தம்.

முருகன் : கண்மணிகளே ! நீங்கள் இருவரும் கூறிய கருத்து சரிதான் என்றாலும் கல்லாதவனைவிட கற்று புகழ் பெற்றோனே எல்லா வகையாலும் சிறப்பாக உயர்ந்தவனாகின்றான். ஆனால் எல்லோரும் படித்துக்கொண்டே இருந்தால் உலகம் எப்படிதான் இயங்குவது ? இருந்தாலும் கற்றவனே கல்லாதவனைவிட சிறந்த புகழ் அடைபவனாவான். அவனால்தான் நாடும், உலகமும் நலமுறும்.

179567

விடுகவிகள்

S. வெங்கிடேசன், *ஆறும் படிவம் 'ஈ' பிரிவு.*

கல்லுமேல் கோரை
கோரைக்குள்ளே குயவன் நான் யார்? — (ஊறு)

"பாரதியின் சாதனை"

*

பள்ளிசெல்லும் குழந்தைகள்தாம் படிக்க படிக்கவே—பாரதி
பாடல்பல எழுதினனே கருத்தை முடிக்கவே
வீரவீர சுவர்க்கம்காட்ட நாளும் எழுதினன்—பாரதி
வீணில்வாழும் வீணரையே வீழச் செய்திட்டான்

ஏர்பிடிக்கும் உழவனையே உயர்த்திப் பாடிட்டான்—பாரதி
எங்கும்வீர சுதந்திரத்தின் விளக்கை ஏற்றிட்டான்
எளியதமிழில் எதுவுமெழுத பயிற்சிக் கொடுத்திட்டான்—பாரதி
எந்தமொழிக் கருத்தையுமே பெயர்க்கச் சொல்லிட்டான்

பாப்பாவுக்காகப் பாப்பாபாட்டு எழுதி வைத்திட்டான்—பாரதி
பாடலையும் குயிலைப்போலே பாடிக் காட்டிட்டான்
அடிமையொழிக்க அருமைமுரசு பாட்டு பாடிட்டான்—பாரதி
ஆங்கிலேயன் வியக்கும்வண்ணம் வீரம் காட்டிட்டான்

இனியதமிழில் சொற்கள்சில எடுத்து ஆண்டிட்டான்—பாரதி
இனிக்கும்கருத்தை சொல்லியபின் மறைந்து போயிட்டான்
இசைத்தமிழில் இன்கவிதை வடித்து வைத்திட்டான்—பாரதி
எப்பவுமே தனைநினைக்கச் செய்து மறைந்திட்டான்.

எஸ். ஏ. இராசன்,
ஒன்பதாம் உயர் வகுப்பு 'ஆ' பிரிவு.

விருந்தோம்பல்

J. C. ராஜா

✻

புயல் எங்கு வீசும் என்று இன்று திட்டமாகக் கூறி விடுகின்றனர். பூகம்பம் எப்போது தோன்றும் என்றுகூட எளிதில் கணித்து விடுகின்றனர். ஆனால் என் தங்கை தன் குடும்ப சமேதராய் எப்போது விஜயம்செய்வாள் என்று எந்த விஞ்ஞானியாலும்கூட கண்டுபிடிக்க முடியாது. ஆண்டுதோறும் தீபாவளி வருகிறது, போகிறது. ஆனால் என் தங்கைமட்டும் வருவதோடு சரி. இதனாலெல்லாம் எனக்கு அப்படி ஒன்றும் குறைந்துவிடாது. காரியாலயத்தில் நான் வாங்கும் நானூறு ரூபாய் சம்பளம் மிச்ச மிகுதி என்றே கூறவேண்டும். வந்தாரை வாழவைக்கும் வண்டமிழ் நாட்டில் தோன்றிய எனக்கா விருந்-தோம்பலைப்பற்றித் தெரியாது. மலர்ந்த முகத்தோடும் குளிர்ந்த வார்த்தைகளோடும்தான் வழக்கம் போல வரவேற்கிறேன். அன்றுவரை ஆமை வேகத்தில் நகர்ந்துகொண்டிருந்த நாட்-களுக்கும் அன்று ஏன்தான் இறக்கைகள் முளைத்தனவோ! விருந்தும் மருந்தும் மூன்று நாட்கள் என்பார்கள். என் தர்ம பத்தினியைச் சும்மா அப்படிச் சொல்லக்கூடாது தங்கமென்-றால் அசல் கோலார்தான். இதற்குள் இரண்டு வாரங்கள் சென்று மறைந்தன. அன்று அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய என்னை என் மனைவியின் சாதாரண சிரிப்பொலி வரவேற்றது. கஜினி போகுமுன் எந்த கோரி வந்திருக்கிறான் என்ற திகைப்-புடன் வீட்டினுள் அடியெடுத்து வைத்தேன். கையில் கற்கண்டோடு வந்த என் அகமுடையாளின் முகமெல்லாம் பற்கள் உண்டு என்று அன்றுதான் எனக்குத் தெரியவந்தது. வீடே இரண்டுபட்டுக்கொண்டிருந்தது, அவள் உள்ளே சென்றதும் என் தங்கை என் முன்வந்து, அண்ணா, இன்று நாங்கள் புறப்படுகிறோம் என்று கூறினாள் – அதற்குள் 'வேகு, வேகு' என்று உள்ளே என் பின்னே துளைந்த என் மைத்துனர், அத்தான், இன்னும் இரண்டு வாரங்களுக்கு leave sanction ஆகிவிட்டது.

இன்று புறப்பாடு cancel என்று கூறிவிட்டுத்தான் மூச்சு-விட்டார். திடீரென சமையற்கட்டில் வெடிகுண்டுகள் வெடித்-தது போன்ற சப்தம். எல்லோரும் திகைத்து நின்றோம். என்னடா, இது, நமக்குக்கூட தெரியாமல் 'இவள்' வெடி குண்டுகள் உற்பத்தி செய்கிறாளாக்கும் என்று எண்-ணிக் கொண்டிருக்கும்போதுதான் 'அது' ஞாபகத்துக்கு வந்தது வேறொன்றுமில்லை. போன தீபாவளிக்கு அவள் அம்மா வீட்டிலிருந்து கொண்டுவந்த சீடை உருண்டைகள்தான். உள்ளிருந்து ஒரு குரலும் வரவில்லை சற்று முன்பு தானே வாயெல்லாம் பற்களாக வந்து நின்றாள். அதில் எத்தனை உடைந்தனவோ அல்லது அவளுக்கு என்னவாயிற்றோ என்ற ஆற்றாமையால் விரைந்து சென்றேன். அவள் சீடைக் குண்டுகளைப் பதுக்கி வைத்திருந்த பாசறைக்கு என்னத்தைச் சொல்ல. நாலு கண்ணாடி டம்ளர்கள் துவம்சம் செய்யப்பட்டு தரையில் கிடந்தன. அவள் திருவாய் மலர்ந்தருளிய முதல் மொழிகளே இவைதான். "இதென்ன சத்திரமா சாவடியா" அவள் 'மூட்' சரியில்லை சற்றுத் தணிந்தபின் வரலாம் என்று முன்னறைக்கு வந்தேன் என்ன வியப்பு! விருந்தாளிகள் போன இடத்தில் புல் முளைத்திருக்கும்; தரை தளம் மட்டும் சிமிண்ட்டில் போட்டிராவிட்டால். பின்னால் திரும்பினேன். மதி போன்ற என் சகியின் முகத்தில் அதே பற்கள். இப்படி எரிந்து விழத்தான் அன்று விழுந்து விழுந்து உபசாரம் செய்தாளோ. யாமறியோம் பராபரமே

விடுகவிகள்

S. வெங்கிடேசன், *ஆறும் படிவம் 'ஈ' பிரிவு.*

உடம்பெல்லாம் சுரசுரப்பாய்
உற்றுப்பார் பச்சைநிறம்
கரும்பல்ல கசப்புடையேன்
கருக்கினால் பயன்படுவேன் நான் யார்? — (பாகற்காய்)

" இவ்வுலகத்தியற்கை "

தொகுப்பும் விளக்கமும்
புலவர் க. சம்பந்தனார், தமிழாசிரியர்

✻

இவ்வுலகம் என்பது இவ்வுலக மக்களைக் குறிக்கின்றது. இம்மக்கட்கு உள்ள இயல்புகளாக சில பண்புகளை இவ்வுலகத்தியற்கையென பண்டைப் புலவர்கள் பின்வரும் பகுதிகளில் குறித்துள்ளார்கள். அவைகளைத் தொகுத்துக் காணுதல் நல்லது ஆகையால் இங்ஙனம் தொகுக்கப்பட்டது.

இவ்வுலகில் ஒருவனை ஒருவன் போரில் கொன்று வெற்றி கொள்ளுதலும் ஒருவனுக்கு ஒருவன் போரில் தோற்று ஓடுதலும் ஆகிய இவை புதியன அல்ல. இவ்வுலகம் தோன்றிய நாள் தொடங்கி நடந்துவரும் நிகழ்ச்சியாகும். இவை இவ்வுலகத்தியற்கையே. இதனைப் பின்வரும் சங்கப் பாட்டுவரிகள் விளக்குகின்றன.

" ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை " —புறநானூறு 76

சங்கப் புலவர்களில் பெருங்கடுங்கோ என்பவர் ஒரு சிறந்த புலவர். அவர் அகத்திணையில் பாலைத்திணை பாடுவதில் மிகத் திறம்பெற்றவர் அதனால் அவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்றே அழைக்கப்படுகின்றார். அப்பெரும் புலவர் இவ்வுலகத்தியற்கையாக ஒரு செய்தியினை அறிஞர் பெருமக்களை விளித்து அறிவுறுத்துகின்றார்.

நல்ல அறிஞர் பெருமக்களே! இவ்வுலகினர் ஒரு செல்வந்தரிடத்திற் சென்று கடனாகப் பொருள் கேட்குங்கால் அதனைப் பெறவேண்டும் என்ற வேட்கை மிகுதியால் அவரை வணங்கித் துதிபாடி இரந்து பெறுகின்றனர். அங்ஙனம் இரந்து பெற்றுண்ணும் கடனை, வாங்கும்பொழுது முகமலர்ந்திருத்தலும், அதனை மறுபடியும் கொடுக்குங்கால் முகம் வாட்டமுறுதலும்

பண்டுதொட்டு இவ்வுலகினரிடத்துக் காணப்படும் இயல்பாயுள்ளது. அங்கிலே இன்றுமட்டும் தோன்றும் புதியதொன்றன்று. இதனைக் கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையில் பாலைத்திணைப் பகுதியில் அப்புலவர் கூறுமாற்றைக் காண்போம்.

"உண்கடன் வழிமொழிந்து இரக்குங்கால் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேருகுதல்
பண்டுமிவ் வுலகத்தியற்கை யஃதின்றும்
புதுவதன்றே புலனுடை மாந்திர்!" — பாலைக்கலி 22

இனி. தமிழ்மறையாம் திருக்குறள் கூறும் இவ்வுலகத் தியற்கையைக் காண்போம். இவ்வுலகில் காணப்படும் இயல்பு இருகூருயுள்ளது அவை மக்கள் குழுவில் செல்வமுடையரா யிருக்கும் இயல்பும், கல்வியறிவினுல் தெளிவுடையராயிருக்கும் இயல்பும் என இரண்டாகும் பொருட்செல்வமும், அரும் செல்வம் தரும் கல்விச் செல்வமும் இம்மை மறுமைப் பயன்களை அளிக்கவல்லனவே. ஆனுல் இரண்டும் ஒருவரிடத்தே காணுமாறில்லை. மக்கள் அவை இரண்டையும் தனித் தனியே தேடும் முயற்சியில் பிறவிக்காலத்தையே போக்கி, குறையிருப்பின் மீண்டும் மறு பிறவியிலும் தொடர்ந்து முயன்று அவற்றை அடைய விழைவாராய் உள்ளனரேயன்றி செல்வம். தெளிந்த கல்வியறிவு ஆமிரண்டையும் ஒருங்கே பெற்றுச் சிறந்தாரில்லை நல்ல அறிவுடையார் வறியராயுள்ளார். மிக்க செல்வம் பெற்ருர் தெளிந்த நல்லறிவிலராகக் காணப் படுகின்ருர். எனவே நல்லறிவு பெறவைக்கும் ஊழ், பெருஞ் செல்வம் எய்துதற்கு உறுதுணையாகாது என்றும், அங்ஙனமே நல்ல திருவினைக்கூட்டுவிக்கும் ஊழ் தெளிந்த நல்லறிவினை எய்துவிக்காது என்றும் இதனுல் நாம் அறிகின்ரேம். ஆதலின் இவ்வுலகம் இருவேருன இயற்கைத் தன்மையையுடையது என்பது நமக்கு நன்கு புலனுகின்றது அல்லவா! இதனை நம் தெய்வத் தமிழ்மறை எங்ஙனம் கூறுகின்றது என்பதை அறிவோம்.

"இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு" — குறள். ஊழ் - 4

அடுத்து சிலம்புச் செல்வர் இளங்கோவடிகள் காணும் இவ்வுலகத்தியற்கையை நோக்குவோம். "நல்ல அறத்தின் வகைகளை உணர்ந்து அவற்றை விரும்பிச் செய்தோர் வானுலகம் அடைவர். ஒருவரிடம் மிக்க அன்புள்ளமுடையோர் இந்நிலவுலகத்து தாம் அன்பு வைத்த இடத்திலேயே மறுபிறப்பில் மீண்டும் பிறந்திடுவர். ஒருவன் செய்த அறத்தின் நற்பயன் அவனையே உறுதியாக வந்தடைகின்றது. அவனும் அதனைப் பெற்று நுகர்கின்றான் அதுபோலவே ஒருவன் செய்த பாவத்தின் தீப்பயனை, செய்த அவனே அனுபவித்து இடர்ப்படுகின்றான். எனவே அறமும் மறமும் அவைகளைச் செய்தவர்கட்கு பயனளிப்பதில் தவறுவதே இல்லை. நிற்க, இவ்வுலகில் பிறந்தவர் இறந்துவிடுகின்றனர். இறந்தவர் மீண்டும் தோன்றுகின்றனர். இவையனைத்தும் பண்டு தொட்டே இவ்வுலகத்தில் நிகழ்ந்துவரும் நிகழ்ச்சியாகும். இவை இவ்வுலக வழக்காறுயுள்ளனவேயன்றி இன்று நேற்று தோற்றிய புதியன அல்ல."

"நற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலும்
அற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைதலும்
பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவதன்றே தொன்றியல் வாழ்க்கை"

— சிலம்பு — 30 - 136 to 140

விடுகவிகள்

S. வெங்கிடேசன், ஆறும் படிவம் 'ஈ' பிரிவு.

சூரியன் காணாத கங்கை
சுண்ணாம்பு அந்த வெண்மை
மண்ணிற் படாத பண்டம்
மனிதற்கு எண்ணெய்த் தருவேன்
என்னைத் தின்பாய் நீயே
என்பேர் என்ன சொல்வாய்? நான் யார்? — (தேங்காய்)

வாய்மையின் மேன்மை

*

(பாட்டு)

சொல்லாதே தம்பி சொல்லாதே—பொய்ச்
சொல்லாதே தம்பி சொல்லாதே—நீ
சோம்பேறியாக என்றும் நில்லாதே [சொல்]

உண்மை என்றுசொல்லி பொய்யைச் சொன்னவங்க
ஊரைக் கெடுத்ததுடன் தானுங்கெட்டார்—சிலர்
அல்லும் பகலும்சும்மா பொய்யைச் சொல்லிசொல்லி
அதிட்டம் இல்லையென்று அலறுகின்றார்
மெய் சொன்னோரெல்லாம் மேன்மையுற்றார் நாட்டில்
பொய்சொன்னோ ரெல்லாம் புறக்கணித்தார் [சொல்]

அரிச்சந்திரன் என்பவன் மெய்ச்சொன்னதால்
அனாதையாய் நன்காட்டிற்கு ஏகிவிட்டான்
மனைவி மகனையும் இழந்துவிட்டான்...... ஆனால்
வாய்மையால் பிற்காலத்தில் மேன்மையுற்றான் [சொல்]

வள்ளுவர் என்பவர் வாய்மையின் மேன்மையை
வற்புறுத்திக் கூறியுள்ளார் தம்நூலில்
உள்ளத்தால் பொய்யா தொழுகுபவர்
உள்ளவர் எல்லா உள்ளத்துள்ளும்
பொய்சிதைக்கும் பொன்போல் மேனிஎன்று
புகழ்ந்து கூறியுள்ளார் கடிகையினில்
பொய்யைச் சொல்பவர் ஒருநாளும்
புகழை அடையவும் முடியாதே
மெய்யைச் சொல்பவர் எந்நாளும்
மேன்மை அடைவார் பலராலே [சொல்]

வெ. இராஜவேல்,
பத்தாம்படி.

ஹிந்தி ஏன்?

S. ராமசாமி

*

நம் பாரதநாடு சுதந்திரம் அடைந்து ஒருசில ஆண்டுகளாகின்றன. நம் நாட்டின் அளவும். மக்கள் தொகையும், எண்ணற்ற மொழிகளும், பல்வேறு ஜாதி, சமய வேற்றுமைகளும் யாவரும் அறிந்ததே. ஆயினும், எல்லாவற்றிற்கும் அடிப்படையிலே ஒரு பொதுக்கொள்கை, பொதுக்கலாச்சாரம் இருப்பதும் யாவரும் அறிந்ததே. ஆகவே, இமயம் முதல் குமரி வரை ஒரு நாடு என்ற உணர்ச்சி நம்மிடையே நெடுங்காலமாய் இப்பொதுக் கொள்கையின் காரணமாக ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் வெவ்வேறு மொழிகளில் பேசும் மக்களிடையே கலாசாரம், வாணிபம், பொருளாதாரம் முதலிய துறைகளில் தொடர்புகொள்ள ஒரு பொதுமொழி தேவை மேலும் நாட்டில் ஒற்றுமையுணர்ச்சியை வளர்த்து பாதுகாக்க இதைவிடச் சிறந்த கருவி வேறொன்று இருக்கமுடியாது

மக்களாட்சியிலே, மக்களெல்லோரும் பெரும்பாலோர் தீர்ப்பை சிறுபான்மையோர் ஒப்புக்கொள்வதும், சிறுபான்மையினர் கருத்துக்குப் பெரும்பான்மையினர் செவிகொடுப்பதும் தவிர்க்கமுடியாத விதிகளாகும். நம் நாட்டில் பெருவாரியான மக்களால் புரிந்துகொள்ளப்படும் மொழி ஹிந்தி ஆகவேதான் ஹிந்தியை அம்மொழி அறியாத மக்கள் அனைவரும் கற்க வேண்டும் இங்கே ஒரு கேள்வி பிறக்கும் ஹிந்தியைக் கற்க கட்டாயம் ஏன் என்பதுதான் அக்கேள்வி. இப்பொழுது உள்ள சென்னை அரசாங்க உத்தரவுப்படி மூன்றும் மொழியாகத் தாய்மொழியைத் தவிர வேறொரு இந்திய மொழியைக் கற்க வேண்டும் என்பதுதான். ஆனால் வேறு மொழிகளைக் கற்பிக்கத் தென் இந்திய பள்ளிகளிலே வசதியில்லாததால் ஹிந்தி மட்டும் இருக்கிறது.

நிற்க நாட்டிலே பிரிவினை ஏற்பட்டபோதிலும்கூட, தமிழ் பேசுபவர்கள் தனித்து மற்றவர்களுடன் எவ்விதத்

தொடர்பும் இல்லாமல் வாழமுடியாது. வாழ்க்கையின் பற்பல துறைகளில் மற்றவரின் தொடர்பு மிகவும் தேவைப்படுகிறது. வெவ்வேறு மொழியை பேசும் மக்களிடையே தொடர்பு வைத்துக்கொள்ள எண்ணிறந்த மொழிகளைக் கற்பது எளிதல்ல. அதற்குச் சுருக்கமான வழி எல்லோரும் ஒரு பொது மொழியைக் கற்பதுதான். அது நமக்கு ஹிந்தி தவிர வேறு எம்மொழியாகவும் இருக்கமுடியாது.

எனவே ஹிந்தி கற்பது நாட்டின் நன்மைக்காகவும், நம் நன்மைக்காகவும் என்பது நன்கு புலனாகும். மாணவர்கள் எல்லோரும் நன்றாக ஹிந்தி கற்பார்களென்று நம்புவோம். பெற்றோரும் அதற்கு ஆவன செய்வார்களென்று எதிர் பார்ப்போம்.

விடுகவிகள்

S. வெங்கிடேசன், *ஆறும் படிவம் 'ஈ' பிரிவு.*

1 ஒருமரம் ஏறி ஒருமரம் பூசி
ஒருமரம் வீசி போகிறான் ஒருவன் அது என்ன ?
— (பாதரட்சை, சந்தனம், விசிறி)

2 சுற்றி சுற்றி முள் அடைத்து
சூரிய காந்தி பட்டுடுத்து
ஐயோ ஒரு பெண்
கை ஏந்தி நிற்கிறாள் அது என்ன ? — (மிளகாய்)

3 சுற்றுவேன் அந்த மரத்தை
சூடேன் அந்தப் பூவை
நத்தேன் அந்தக் காயை
நாடுவேன் அந்தப் பழத்தை அது என்ன ? —(வேப்பமரம்)

4 ஈரேழு பதினாலு சோலை
இருபக்கம் தச்சர்தம் வேலை
அதை வெடித்தவர்க்கு நவரத்ன மாலை அது என்ன ?
—(பல்லாங்குழி)

Sri SAM. P. JESUADIAN

Samuel Pakkiam Jesuadian to give him his full name was born on January 4th 1883, in Manarammiapuram in Tinnevelly District. His father G. Yesudian ministered to men's bodies and souls in that he was both a Native Doctor and a C. M. S. Catechist. His mother Gnanavadivammal came of a very good and devout Christian family, being the daughter of one Mr. Moses. Mr. S. P. Jesuadian had his education in Mengnanapuram Boys' High School under the famous Headmaster, Rev. Ambrose V. Thomas. He got trained as a teacher in Nazareth and married Gnanasundariammal on January 5th, 1905. She was one of the first batch of women matriculates sent up by St. John's Girls' High School in Nazareth during the time of Canon Margoschios. They arrived in Madras with an infant daughter in January 1906, on the same date as King George V visited Madras as Prince of Wales and taught in the Church of Scotland Mission School in Madras. Five years later he and his wife came to Cuddalore in January 1911. He was the "Beloved Teacher." in Cuddalore till January 1961 when he was called to higher services. Gnanasundariammal died in 1925 and he married Pushpamani Ammal in 1926. His hard work, cheerful spirit, generous dealings and true christian love made him indeed like Enoch - "He walked with God" Here is an account from one who had known him since 1911.

—**FAMILY.**

Late Mr. Sam. P. Jesuadian

IT gives me a pleasure to write a brief life sketch of the late Mr. Samuel P. Jesuadian, a retired teacher of St. David's High School, Cuddalore, O. T. whom I had the privilege of knowing intimately for the past more than half a century. He was my guru in the School to begin with and later on was my co-teacher, a member of the Parish and the Secretary of the Pastorate Committee. I think he was a member of the Cuddalore Pastorate Committee for nearly five decades right to the end of his life.

There is a Tamil proverb – " ஐந்து பெண்களிருந்தால் அரசனும் ஆண்டியாவான் " " If a man has five girls, even the king becomes a pauper ". But Mr. Sam. P. Jesuadian was blessed with seven girls and three boys and his house was a ' Baukia Nilayam '. All his children are well settled down in life with decent education. He managed to purchase a house where there is now a successful Basic School under his management with half a dozen teachers or more. He has a wet land, dry land, cows, poultry, pigeons, pet animals and birds etc. etc. How was it that a teacher with a small pay was in a position to live like a small maharaja right from the beginning making his house a home of hospitality where rich or poor had always something to get ? How did this miracle happen ?

The first and foremost reason was his exemplary family life. He was blessed with a partner devoted, intelligent and hardworking and both of them with faith in God and hard work from early morning to night were in a position not only to maintain the family, but give liberally to others. He trained his children to work hard

and live happy together. I happened to be with him one night in order to take the next day morning Holy Communion service in the Church. But there he was up early in the morning and after a short devotion was busy with his wife and children engaged with a number of things looking after the cows, fowls, pigeons, garden etc. and literally commanding to do a number of such activities with his usual commanding voice. There was always the love and affection between the parents and children and so the team work of the family was something which attracted me. The tuition boys and girls arrived and every one was instructed what he or she has to prepare and the whole family was in the Church for the Divine service. It was not a Sunday. His love and affection for the family is something which knit together the family members and share the responsibilities of running the home. He had a commanding personality and the children were happy to do his bidding. Even after his children were married and settled down he insisted that they should be with him particularly during Christmas and it was always a pleasure to see them together happy and cheerful and worshipping together on Christmas Day. He often said that this gave him the greatest happiness in his life.

The love and affection evinced in his family life was there in the school also. He not only knew almost all the boys in the school by their names, but also their parents. He was therefore a very popular teacher usually known in Cuddalore as " Second Form Teacher ". No one could excel him in the teaching of English grammar. Boys loved him and were always ready to do any service asked of him. There was a real love and fellowship between the manager the late Rev. G. Arumainayagam, the Headmaster, the late Rev. G. Y. Tucker and the teachers. Mr. Sam. P. Jesuadian being sociable took an active part in the social

gatherings like picnic, Ingathering festival etc. and spread joy and laughter all around. He gathered together not only the teachers but their families and so here also the Church became more or less a family gathering.

Mr. Sam. P. Jesuadian was a willing and energetic worker in the Church activities. He appeared for the Bishop Gell Prize Examinations and won prizes including the First prize. He took a lead in the Evangelistic work in and round Cuddalore and particularly in a village called Anukapet which was an out station of Cuddalore. It was always a happy gathering and with the jovial and lively presence of Mr. Sam. P. Jesuadian the propagation of the Gospel was very well done. The beauty was that he had the knack of getting acquainted with the people whom he met and get into their confidence. Our food arrangements were usually under his command. We enjoyed a good feed along with our spiritual work. He was also an Hon. Catechist conducting Divine service, visiting the members of the congregation and conducting Prayer meetings and giving them help both for body and soul.

Mr. Sam P. Jesuadian was perhaps the last man in Cuddalore of the old school. God gave him a fairly long span of life in which he served Him faithfully and to the best of his ability till he breathed his last. God certainly used him for His glory. His end was peaceful. Mr. Sam. P. Jesuadian has now left his children to continue the good he has done for His glory. His eldest daughter Miss Getsie Samuel, after her mother's death looked after the family and shared the responsibility of her father and brought up her brothers and sisters. She is now in charge of St. Christopher's Training College, Madras, doing God's work in Training teachers. Our loving Heavenly father is using

her mightily for His purpose. Her younger sister Mrs. Lily Charles is now the Principal of All Saints Girls' Training School, Thiruchirapalli giving them training and doing good Christian work. Other children of Mr. Sam. P. Jesuadian are each being used for God's glory. May god bless them abundantly. Mr. Sam. P. Jesuadian can certainly say with St. Paul - "I have fought a good fight, I have finished my course, I have kept the faith: henceforth, there is laid up for me a crown of righteousness".

D. C. TUCKER,
Tucker Church C. S. I.,
Madras.

School Report

THE year under review began with a strength of 909 on the rolls registering an increase of 51 pupils over that of the previous year. If growth were to be taken as a sign of improvement we have been improving year after year. The change of Forms into Standards has had some effect on the strength of the school and only when all the Forms have given place to the Standards we can say thus far and no further to this increase in strength.

Though it is said by educationists that examinations do not really measure the attainments of pupils, yet it continues to be the yardstick by which the public generally measures the efficiency of an institution. We are really sorry the results at the last S. S. L. C. Public examination has not been anywhere near our attainments in the previous four or five years when we received congratulatory messages from the Departmental Officers. Since Form VI batch was the last one to appear under the 1948 scheme we were rather liberal in the selection and that did pull down our results to a certain extent. Though English is generally a stumbling block, strange to say, there were a few failures because of the low marks in Tamil and Hindi under Part II.

With regard to Staff in spite of the Training Colleges the High School department continues to be manned by one or two untrained graduates almost every year. We should like to mention here the passing

away of a retired teacher, Mr. Sam P. Jesuadian who had put in a long service of about thirty years in this school which was then a Middle School. His hobby was photography and it is fitting that his photograph should appear in this issue. The school has not severred its connection with the family as his youngest son is serving the school as Head Clerk.

In the field of sports great emphasis is laid on inter house sports and games competitions as they afford a better scope for many of the pupils to take part and in inculcating group sense and promoting sportsmanship. The Annual sports meet was held in the temple grounds as we are being deprived of the eleven acres of land that was alienated to us fifteen years ago. We shall be very thankful if the powers that be could alienate some other piece of land near the school for use as playground. Mass drill is being conducted on the second Wednesday of every month and it is really a sight to watch the pupils exercising their limbs dressed in school uniform which is olive green shorts and white shirt.

In compliance with the wishes of our popular Director of Public Instruction we have introduced the scheme of Supervised Study before the forenoon and afternoon sessions. Free mid-day meal is provided to indigent pupils, of course with the help given by the public and the management.

We are indeed grateful to God for His wonderful guidance in the past in the midst of several difficulties. We pray that He will make us worthy of His calling.

O God our help in ages past
Our hope for years to come
Our shelter from the stormy blast
And our eternal home.

G. M. ARUMAINAYAGAM

179567
-600 008.

கடலூர் புதுநகர்

Y. M. C. A. கட்டிடத்திலுள்ள

இளங்கோ சைக்கிள் ஸ்டோரில்

எல்லாவித

சைக்கிள் சாமான்களும்

குறைந்த விலையில் கிடைக்கும்.

ஒருமுறை நேரில் விஜயம் செய்யவும்.

உரிமையாளர்

A. கண்ணன்

இளங்கோ சைக்கிள் ஸ்டோர்

கடலூர் புதுநகர்

Printed at the Saraswathi Press, Tirupapuliyur

Editor : G. H. CLARENCE, B. A., L. T.,